விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 தை 12 ஞாயிற்றுக்கிழமை (26.01.2003) தொலைபேசி- 2223378 ஒலி 38

## யாழ்.பல்கலைக் கழக "கவுன்ஸில்" கூட்டத்திற்குச் சென்ற

# மூதவை உறுப்பினரை வழி மறித்து மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்!

### ராக்கிங் செய்தியால் குழப்பம்-கூட்டம் ஒத்தி வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மூதவை நேற்றுக் கூடுவதாக இருந்த போதிலும் மாணவர்கள் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கை காரணமாக மூதவைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

யாழ்.பிராந்தியப் பத்திரிகையொன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் தகாத முறையில் ராக்கிங் இடம்பெற்றதாக செய்தி வெளியிட்டதையடுத்து யாழ்.பல்கலைக்கழக மூதவையின் உறுப்பினராகவுள்ள குறித்த பத்திரிகையின நிர்வாக இயக்குநரை நேற்று நடைபெறவிருந்த மூதவைக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்கு பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்தே மூதவைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,


நேற்றுக் காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 6வது துணைவேந்தரைத் தெரிவு செய்வதற்கான மூதவைக் கூட்டம் கூடவிருந்தது. இதற்காக மூதவை உறுப்பினர்கள் நேற்றுக் காலை பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்தனர்.

ராக்கிங் செய்தியை வெளியிட்ட பத்திரிகையின் நிர்வாக இயக்குநரும் மூதவை உறுப்பினருமான சரவணபவன் பல்கலைக்

(03ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணப்படும் வரை

# ஆயுதங்களை கீழே போடுமாறு புலிகளைக் கோரமுடியாது!



## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**விடுதலைப் புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டுள்ளதினால் மீண்டும் ஒரு யுத்தத்திற்கு அவசியம் இல்லை எனவும்,இனப் பிரச்சினைக்கான உறுதியான, இறுதியான அரசியல் தீர்வு காணப்படும் வரை விடுதலைப்புலிகள் வசம் உள்ள ஆயுதங்களைக் கீழே போடுமாறு கோரி அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியாது என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**

இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சம்மேளனத்தின் 23வது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் .சம்மேளனத்தின் 23வது வருடாந்த பொதுக் கூட்டம் நேற்று ஸ்ரீ கொத்தா அலுவலகத்தில நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

(10 பக்கம் பார்க்க)



நேற்று யாழ்.பல்கலைக் கழகத்தில் இடம் பெற்ற மாணவர்களின் ஆர்ப்பாட்டம். மேலும் படங்கள் உள்ளே

## ஈ.பி.டி.பி அலுவலகம் மீது பெற்றோல் குண்டுத் தாக்கு

(ஏழாலை)

மல்லாகம் ஈ.பி.டி.பி அலுவலகம் நேற்று முன்தினமிரவு 12.30 மணியளவில் இனந்தெரியாதோரால் பெற்றோல் குண்டு வீசித் தாக்கப்பட்டதாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இவ் அலுவலகத்தின் தெற குப்புறவேலி எரிந்துள்ள போதும் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. இதேவேளை சம்பவம் இடம்பெற்ற பின்னர் சிறிது நேரத்திற்கு துப்பாக்கி வேட்டுக்கள் கேட்டவண்ணம் இருந்ததாகவும் இதனால் மக்கள் பதற்றம் அடைந்து காணப்பட்டதாகவும்

(10ம் பக்கம் பார்க்கவும்)

அன்பு வாசகர்களே!
நாளை உங்களின்
சங்கு நாதம்
விஷேட அரசியல்
கட்டுரையுடன்

## யாழ்.பல்கலைக் கழகத்தின் பேரவைக் கூட்டம் 29ம் திகதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக பேரவையின் மாதாந்தக் கூட்டமும் துணைவேந்தர் பதவிக்கு பெயர்களை சிபார்சு செய்வதற்கான விஷேட கூட்டமும் நேற்று நடை பெறவில்லை.

இக் கூட்டத்திற்க வருகை தந்த பேரவை உறுப்பினரான சரவணபவனை பல்கலைக்கழகத்திற்குள் நுழைய முடியாதவாறு மாணவர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதனால் அவர் அக் கூட்டத்திற்கு சமூகம் அளிக்க

(10ம் பக்கம்பாக்க)

## புலிகளுக்கு புலமைப்பரிசில்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் இயககத்தை சேர்ந்த இளைஞர் யுவதிகள் வெளிநாடு சென்று தொழில் நுட்ப பயிற்சிகளைப் பெற கனடா அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று 500 புலமைப்பாிசில்களை வழங்க முன்வந்துள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

தலா 15 இலட்சம் ரூபா பெறுமதி கொண்ட பல தொழில்நுட்ப கற்கை நெறிகளை இலவசமாக கற்கும் வாய்ப்பை மேற்படி 500 பேரும் பெறவுள்ளனர்.

இப்புலமைப்பரிசில் திட்டத்திற்கு கனடாவில் உலகததமிழர் மன்றம் அனுசரணை வழங்குவதாகவும் தெரியவந்துள்ளது. (உ)

## பிரதமர்,அமைச்சர்களுக்கென விஷேட பாதுகாப்பு பிரிவு

(கொழும்பு)

பிரதமரதும்,அமைச்சர்களினதும் பாதுகாப்புப் பிரிவுகளும் ஒன்றிணைக்கப்பட்டு விஷேட பிரிவொன்று அமைகக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் விஷேட பாதுகாப்புப் பிரிவுக்குள் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவு உள்ளடக்கப்படவில்லை இதேவேளைவெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கும் தலைவர்களுக்கும் பாதுகாப்பு அளிப்பதற்கு விஷேட பாதுகாப்பு அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு அதற்குப் பொறுப்பாக பொலிஸ்மா அதிபர் ஜயந்த கமகே நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்விஷேட பாதுகாப்பு பிரிவின் மூலம் வெளிநாட்டு அமைப்புக்கள் உள்ளிட்ட 19 அமைப்புகளுக்கு பாதுகாப்பு அளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகம் நாளை முதல் இயங்கும்

(கொழும்பு)

கொழும்பு ஸ்ரீஜயவர்த்தனபுர பல. கலைக்கழகம் இரண்டு மாத இடை வெளிக்குப்பின் மீண்டும நாளை திங்கட்கிழமை முதல் திறக்கப்படவுள்ளதாக பல்கலைக் கழக உப வேந்தர் அறிவித்துள்ளார்.

சமந்த என்ற பல்கலைக்கழக மாணவர் கொலை செய்யப்பட்டதை அடுத்து இப் பல்கலைக்கழகம் கடந்த இரண்டு மாதகாலமாக முடப்பட்டிருந்தது.

பல்கலைக் கழகத்தினதும்,விடுதிகளினதும் பாதுகாப்புக் கருதி பல்கலைக்கழக வளாகத்திற்கு அருகில் 15 காவல்துறையினரை உள்ளடக்கிய காவல் நிலையம் ஒன்றும்அமைக்கப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் பல்கலைக்கழக மாணவர்களின் அடாவடித் தனங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுமென பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

# யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று ஆர்ப்பாட்டம்




யாழ். பல்கலைக்கழகத்தின் முகப்பு வாயிலை மாணவர்கள் பூட்டி வைத்திருக்கும் காட்சி.





பல்கலைக்கழக வளாகத்தில் திரண்டிருக்கும் மாணவர்களில் ஒருபகுதியினர்.




உதயன் பத்திரிகை நிர்வாக இயக்குநர் சரவணபவனை பல்கலைவளாகத்துக்குள் செல்லவிடாது மாணவர்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.



மாணவர்களைச் சமாளிப்பதில் பேராசிரியர்கள் முயற்சி - முடிவு தோல்வி.



மாணவர்களின் எதிர்ப்புக்கு ஈடுகொடுக்க முடியாமல் சரவணபவன் வளாக வாசலில் இருந்து சோகத்தோடு வெளியேறுகிறார்.




ஆறுதல் கூறும் பேராசிரியர்கள்



ஆழ்ந்த யோசனையில் துணைவேந்தர், ஆலோசனையில் நீதிபதி திருநாவுக்கரசு, பேராசிரியர் சண்முகதாஸ்

# கஞத்துறை தமிழ் அரசியல் கைதிகள் மீண்டும் சாகும் வரை உண்ணாவிரதத்தில் குதிப்பர்

## அரசியல்வாதிகளின் தலையீட்டிற்கும் ஆப்பு

(கொழும்பு)

பயங்கரவாத மற்றும் அவசர காலத் தடைச் சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டு களுத்துறைச சிறைச் சாலைகளில் தடுத்து வைக் கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள், எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3ம் திகதி முதல் மீண்டும் சாகும்வரையிலான உண்ணாவிர தத்தை ஆரம்பிக்கப் போவதாக அறி வித்துள்ளனர்.

மேற்படி அரசியல் கைதிகள் அனைவரும் மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தே தமது உண்ணாவிரதப் போராட் டத்தை ஆரம்பிக்கவுள்ளனர்.

சகல தமிழ் அரசியல் கைதி களினதும் வழக்குகளை ஒரு மாதகாலத்துக்குள் விசாரித்து முடிப்பதாக உறுதி வழங்கப்பட வேண்டும்.

அனைத்து தமிழ் அரசியல் கைதி களையும் உடனடியாக பிணை யில் செல்ல அனுமதிக்க வேண் டும்.

யாழ்ப்பாணம், மன்னார், திரு கோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கைதி களின் வழக்கு விசாரணைகளை அந்தந்த மாவட்டங்களில் உள்ள மேல் நீதி மன்றங்களுக்கு மாற்ற வேண்டும் ஆகிய கோரிக்கை களையே முன்வைத்துள்ளனர்.

தமது விடுதலை குறித்து அரசாங்கமோ, தமிழ் அரசியல் கட்சிகளோ எந்தவித நடவடிக்கையும் எடுக்காது தொடர்ந்தும் அசமந்தப போக்கையே காட்டிவருகின்றன.

இதனால் இம்முறை நாம் ஆரம்பிக்கவுள்ள உண்ணா விரதப் போராட்டத்தில் அரசியல்வாதி கள் எவரும் தலையிட்டுப் பொய் யான வாக்குறுதிகள் எதனையும் வழங்கவேண்டாம் எனவும் அவர் கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (உ-8)

# கோப்பாய் பி.செ.பிரிவில் 12 கிராம அலுவலர்கள் தரம் I க்கு பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றும் 12 கிராம உத்தியோகத்தர்கள் தரம் I க்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

அவர்களின் பெயர் விபரம் வருமாறு;ஆர்.கணேசலிங்கம்(ஆவ ரங்கால் மேற்கு),கே.சிவகுலதிலக சிங்கம்(பத்தமேனி),எஸ்.செல்வச் சந்திரன்(உரும்பிராய் மேற்கு), ஜெ.ஜோசப் றட்ணராஜா(கோப் பாய் மத்தி),ரி.தங்கராஜா,உரும் பிராய் வடக்கு),கே.குலேந்திர நயகம்(ஆவரங்கால் கிழக்கு) கே.வைத்தியநாதர்(புத்தூர் கிழக்கு), எஸ்.விக்னேஸ்வரன்(உரும்பிராய் கிழக்கு),பி.மகேந்திரன்(நீர்வேலி மேற்கு),கே.ஸ்ரீஸ்கந்தராசா(சிறுப் பிட்டி கிழக்கு),எஸ்.முத்துக்குமார சாமி(கல்வியங்காடு),கே.கதிரமலை நாதன்(வளலாய்) (உ)

# காட்டு விலங்குகளை வேட்டையாட தமிழீழ வனவளப் பிரிவு தடை

(கிளிநொச்சி)

தமிழீழ வனவளப்பாதுகாப் பிற்கு ஒத்துழைப்பை வழங்கி வனவளத்தை பேண அனைவரும் உதவவேண்டும்.


இவ்வாறு, தமிழீழ வனவள பாதுகாப்புப்பிரிவு பொறுப்பாளர் சக்தி பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்தள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கூறுகை யில், வனவிலங்கு மற்றும் பறவை களின் அழிவு வீதங்கள் பற்றியும இதனால் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய விளைவுகள் பற்றியும் சிந்திக்கவேண்டிய நிலைக்கு நாம தற்போது தள்ளப்பட்டுள்ளோம்.

அண்மைக் காலமாக வனவிலங் குகள் மற்றும் பறவைகள், பெரு மளவு அழிந்து வருகின்றமை யினால் இயற்கைச் சமநிலை பாதிப்பு, உயிரியல் சூழல் பாதிப்பு என்பன இடம் பெறுகின்றன.

எனவே, இவ்வாறான பாதிப்புக் களைத் தவிர்த்து வனவளங் களைப் பேண அனைவரும் ஒத்து ழைப்பு வழங்கவேண்டும் என் றார்.

இதேவேளை, காட்டு விலங்கு களை வேட்டையாடுவதற்கு தமிழீழ வனவள பாதுகாப்புப் பிரிவு முற்றாக தடைவிதித்துள்ளதா கவும் அவர் சுட்டிக்காட்டினார். (உ-10)



சா.வே.பஞ்சாட்சரம்' எழுதியதமிழிலக்கணப் பூங்கா நூலின் சிறப்புப்பிரதியைப் பேராசிரியர் சபாஜெயராசாவிடமிருந்து உப அதிபர் ஏ.சி.சண்முகலிங்கம் பெற்றுக் கொள்வதையும் அருகில் நூலாசிரியர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## மூதவை உறுப்பினர்......

கழகத்திற்கு செல்ல முற்பட்ட போது பல்கலைக்கழக மாணவர் கள் திரண்டு வளாகத்தின் முகபபு வாயிலை பூட்டி எதிர்ப்புத் தெரி வித்தனர்.

ராக்கிங் தொடர்பான செய்தியை நிரூபிக்குமாறு அவர்கள் கோஷ மிட்டனர்.சரவணபவன் சென்ற காரைச் சூழ்ந்தவாறு பல்கலைக் கழக மாணவர்கள் திரண்டு நின் றதால் அவரை மாணவர்களிடம் இருந்து விடுவிக்கும் முயற்சி யில பல்கலைக் கழகத்தின் மூத்த பேராசிரியர்களும் மூதவை உறுப் பினர்கள் சிலரும் ஈடுபட்டனர்.

இதன் போது மாணவர்கள் பல்வேறு சுலோகங்கள் அடங் கிய பதாதைகளை ஏந்தியவாறு கைகளை உயர்த்திப் பலமாகக் கோஷமிட்டதுடன் சரவணபவன் வந்த காரை மாணவர்கள் திரண்டு பின் நோக்கித் தள்ளிச்சென்றனர். மாணவர்களின் எதிர்ப்பைச் சமா ளிக்க முடியாத நிலையில் சரவ ணபவனின் கார் பல்கலைக்கழகத் திற்குச் சமீபமாகஇராமநாதன் வீதி யில் நீண்டநேரம் தரித்துநின்றது.

மாணவர்களின் எதிர்ப்புக்கு மத்தி யில் நிலைமையை சுமுகப்படுத்தி மூதவைக் கூட்டத்தை நடத்தும் முயற்சியில் பேராசியரியர் அ.சண் முகதாஸ்,மோகனதாஸ்,சி.க.சிற்றம் பலம் மற்றும் மூதவை உறுப்பி னர் சிலரும் ஈடுபட்ட போதிலும் அது பயனளிக்காது போனது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழ கத்தில் ராக்கிங் இடம் பெற்ற தாக செய்தியை குறித்த பத்தி ரிகை நிரூபிக்க வேண்டுமெனவும் அந்த ராக்கிங்கில் ஈடுபட்ட மாண வர்களை பல்கலைக்கழக நிர் வாகம் தண்டிக்க வேண்டும்என் பதும் பல்கலைக் கழக மாணவர் களின் கோரிக்கையாக இருந்தது.

அவ்வாறு ராக்கிங் பற்றிய ஆதா ரங்கள் எதனையும் குறித்த பத் திரிகை வெளியிடத் தவறுமாயின் பல்கலைக் கழக சமூகத்திற்கே இழுக்கை ஏற்படுத்திய அந்தச் செய்திக்காக குறித்த பத்திரிகை பகிரங்க மன்னிப்புக் கோரவேண் டும் என்பதும் மாணவர்களின் கோரிக்கையாக இருந்தது.

மாணவர்களின் எதிர்ப்பைச் சமாளித்து மூதவை கூட்டத்தை நடத்த முயற்சித்த மூத்த பேரா சிரியர்கள் மற்றும் மூதவை உறுப் பினர்களிடம் பல்கலைக்கழக மாணவர்கள் தமது கோரிக்கை யைத் தெரிவித்ததோடு,ராக்கி ங்கை எதிர்க்கும் எம்மைப்பற்றி மிகவும் இழிவுபடுத்தும் நோக்கில் ஓர் ஆதாரமற்ற ராக்கிங் செய் தியை வெளியிட்டமை உங்கள் கௌரவத்தையும் பாதிக்குமல் லவா? என மாணவர்கள் சிலர் உணர்ச்சியோடு நிலைமையைச் சமாளிக்க முற்பட்ட பேராசிரியர் களிடமும் மூதவை உறுப்பினர் களிடமும் கேள்வி எழுப்பியதால், அதற்குப பதிலளிக்கும் வகையில் மாணவர்களின் கோரிக்கையை நியாயமானதென ஒத்துக் கெள்ள மூத்த பேராசிரியர்களும் மூதவை உறுப்பினர்கள் சிலரும் மாண வர்களின் நியாயமான கோரிக்கை பற்றி காரில் காத்து நின்ற சர வணபவனிடம் எடுத்துக் கூறினர். எனினும் சுமுக நிலைமை ஏற்ப டாத காரணத்தினால் மூதவைக் கூட்டம் எதிர்வரும் 29ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதனையடுத்து மாணவர்க ளால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப பாட்ட போராட்டமும் கைவிடப் பட்டது. (தி)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சுன்னானம் கிழக்கு J/197
கிராம உத்தியோகத்தர்
திரு. லி. மா. இராமலிங்கம்

அவர்கள் எமது கிராமத்தில் சேவையாற்றத் தொடங்கிய காலத்தில் இருந்து, மக்களின் தேவைகளை கண்டறிந்து உடனுக்குடன் நிறைவேற்றி மக்கள் மனதில் நிறைந்து திகழ்ந்து விளங்கிக் கொண்டிருக்கும் அவருக்கு தரம் 1ற்கு பதவி உயர்வு கிடைத்ததையிட்டு எமது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். தொடர்ந்தும் பல உயர்வுகள் பெற்று சேவையாற்றி நீடூழிவாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*கறட்டியன் வைர ஆலய பரிபாலனசபையினர்,*
*விவசாய சம்மேளனம்,*
*கிராம முன்னேற்ற சங்கம்,*
*ராஜ விளையாட்டுக் கழகம்,*
*கிராமமக்கள் சுன்னாகம் கிழக்கு.*

(C/5714)


## ஆசிரியர் விபரம் சேகரிப்பு

(உடுவில்)

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளில் கணித, விஞ்ஞான பாடங்களை கற்பிக்கின்ற ஆசிரி யர்களின் விபரங்கள் வலயக்கல்விப் பணிமனையால் சேகரிக்கப்பட்டு வருகின்றன. (உ-261)


The Royal College of Jaffna.
Spoken ENGLISH
426(302), K.K.S.R.d, Jaffna.
Black Road, Chankanai (6492)



## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய். பதிவு செய்த கட்டிட, தளபாட ஒப்பந்தக்காரர்களை புதுப்பித்தல்-2003

வலி-தென்மேற்கு பிரதேசசபையில் பதிவு செய்த கட்டிட, தளபாட ஒப்பந்தக்காரர்களை 2003 ஆம் ஆண்டிற்கான பதிவினை 2003.02.05 ஆம் திகதிக்கு முன்னர் ரூபா 500/= ஐ செலுத்தி புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். இத்திகதிக்குப் பின்னர் ஒப்பந்தம் புதுப்பிக் கப்படமாட்டாது என்பதையும் அறியத் தருகின்றேன்.

பி.விக்டர்,
செயலாளர்,
வலி - தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

வெ.அ.ஜோன்சன், ஜே.பி.யு,.எம்
தலைவர்,
வலி - தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(C/5712)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சுன்னாகம் கிழக்கு J/197
கிராம உத்தியோகத்தர்
திரு. லி. மா. இராமலிங்கம்

அவர்கள் எமது கிராமத்து மக்களுக்கு சேவையே தனது மகத்தான பணியென செவ்வனே நிறைவேற்றி யதன் பயனாக மக்களின் ஆசீர்வாதத்தினாலும், தனது திறமையினாலும் தரம் 1 ற்கு பதவி உயர்வு பெற்றுக் கொண்டதையிட்டு எமது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். அவர் மென்மேலும் பல உயர்வுகள் பெற்று மக்கள் சேவையில் பலகாலம் தொடர்ந்து நற்பணியாற்ற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுன்னாகம் கிழக்கு.
து. ஜெயஆனந்தராசா (சிறி), குடும்பத்தினர்.

(C/5714)



## அன்பே - எம்மை ஆளக் கூடியது!



ஆசிரியர்களே!

இவ்வாறு தண்டனை வழங்குவதன் மூலம் மாணவர்களை ஆற்றுப்படுத்த முடியும் என இன்னமும் நம்பிக் கொண்டிருக்கிறீர்களா?

அடிதடிகளும்
அகோர தண்டனைகளும்
அவர்களை
ஆற்றுப்படுத்துவற்குப் பதிலாக அழித்துவிடுகின்றன!
உற்சாகத்துடன் ஊக்கத்தையும் கெடுத்து வன்முறை மிகுந்த எதிர்காலத்திற்கு வழி வகுத்து விடுகின்றன.

வெளியீட்டு
அனுசரணை- Sc(UK)

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு,
அறை எண் - 30 .
யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
T.P 222 2261 Ext 274

(C/5711)

# ஐவரிக்கோஸ்ட் தீவிரவாதிகள்
# கருத்து முரண்பாடுகள் களைந்து
# ஒன்றிணையத் தயார் என அறிவிப்பு


(அபிட்ஜான்)
ஐவரிக்கோஸ்ட் இனப்பிரச்சினைக்கு முடிவு காணும் பொருட்டு கூட்டரசாங்கம் ஒன்றை அமைக்கும் வகையில் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்ட தீவிரவாத இயக்கங்கள் பல ஒன்றிணைவதற்கு தயாராக உள்ளதாக அறிவித்துள்ளன.

அத்துடன், நான்கு மாத காலமாக இடம்பெற்றுவந்த வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட இயக்கங்கள் முன்வந்துள்ளன.

இவ்வார இறுதியில் பாரிஸில் நடைபெறவுள்ள மேற்கு ஆபிரிக்கத்தலைவர்களின் உச்சிமாநாட்டின் போது, இந்த இணக்கப்பாடுகள் அங்கீகரிக்கப்படவுள்ளதாக, பாரிஸ் சமாதானப்பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

ஐவரிக்கோஸ்டின் ஜனாதிபதியாக லோறன்ஸ் றொபேக்கோ தொடர்ந்தும் பதவி வகிக்கலாம் என்றும், விரிவான அரசியல் உடன்பாட்டுடன் தெரிவு செய்யப்படும் பிரதமர் ஒருவருடன் அதிகாரத்தைப்பகிர்ந்து கொள்ள வேண்டுமென்றும் சம்பந்தப்பட்ட தீவிரவாத இயக்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இதேவேளை, பிரான்ஸின் அனுசரணையுடன் தலைநகர் பாரிஸில் இடம்பெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் எதுவித தடைகளுமின்றி தொடர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-2)



கேரள மாநிலம் கொச்சி நகரில் கோயில் விழா ஒன்றில் கலந்து விட்டு திரும்பிக் கொண்டிருந்த யானைக்கு திடீரென மதம் பிடித்தது. இதில் அந்த யானை தனது பாகனையே தும்பிக்கையால் தூக்கி வீசியதுடன், மிதித்துக் கொன்றது. பின்னர் கால்நடை மருத்துவர்களின் உதவியுடன் யானை கட்டுப்படுத்தப்பட்டது.

# சக மாணவனைப் பிணை வைத்த துப்பாக்கி நபர்

(ஆவில் ஹில்)
பள்ளியில் துப்பாக்கி முனையில் சக தோழனையே பிணைக்கைதியாக வைத்தான் ஒரு மாணவன். பின்னர் அந்த மாணவன் சரண் அடைந்தான்.

அமெரிக்காவில் மேற்கு கார்டர் நடுநிலைப் பள்ளியில் புதன்கிழமை இச்சம்பவம் நடந்தது.

6-வது வகுப்பு படிக்கும் அந்த மாணவன் துப்பாக்கியுடன் பள்ளிக்கு வந்திருந்தான். திடீரென்று அந்தத் துப்பாக்கியைக் காட்டி மாணவர்களை மிரட்டினான். குறிப்பிட்ட ஒரு மாணவனை மட்டும் பிணைக் கைதியாக பிடித்து வைத்துக் கொண்டான்.

இது குறித்து பொலிஸாருக்கு உடனடியாக தகவல் தரப்பட்டது. அவர்கள் விரைந்து வந்தனர். அந்த மாணவனை தந்திரமாகப் பள்ளியை விட்டு வெளியே அழைத்து வந்தனர். பின்னர் அந்த மாணவனே சரணடைந்து விட்டான். பிணைக் கைதியாக பிடித்து வைத்த மாணவனும் விடுவிக்கப்பட்டான். துப்பாக்கியை காட்டிய அந்த மாணவனின் பையில் கத்தியும் இருந்தமை பின்னர் தெரியவந்தது.

அப்பள்ளி இருக்கும் அதே பகுதியில் ஈஸ்ட் கார்டர் உயர் நிலைப் பள்ளியில் 1993 ஜனவரி 18ஆம் திகதி ஒரு ஆசிரியரை ஒரு மாணவன் சுட்டுக் கொன்றான். சில மாணவர்களையும் பிணைக் கைதியாகப் பிடித்து வைத்தான்என்பது குறிப்பிடத்தக்கது (பி)

WORLD NEWS
உலக தரிசனம்

## பலத்த பாதுகாப்புடன் இந்திய சுதந்திர தினவிழா

(புதுடில்லி)
இந்தியாவின் 54ஆவது குடியரசு தினவிழா இன்று கடும் பாதுகாப்புகளுக்கு மத்தியில் நடை பெறவுள்ளது.

இந்த விழாவிற்கு ஈரானிய அதிபர் மொகமட் கடாமி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இதற்காக இவர் கடந்த இரு தினங்களுக்கு முன்னரே புதுடில்லி வந்தடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-2)

# ஒஸாமாவின் சகாக்கள் ஸ்பெயினில் சிக்கினர்

(மாட்ரிற்)
ஒஸாமா பின்லேடனின் அல்கெயடா இயக்கத்திற்கு எதிராக ஸ்பெயினில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது ,அவ்வியக்கத்துடன் தொடர்புடைய தாகக் கூறப்படும் 19 சந்தேக நபர்களை ஸ்பெயின் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பிரான்ஸ் அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் 150 ஸ்பெயின் பொலிஸார் பஷிலோனாவைச் சூழவுள்ள பகுதிகளில் நடத்திய தேடுதலின் போதே இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை நடத்தப்பட்ட இந்தத் தேடுதல் நடவடிக்கை போன்று இன்னும் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் விசாரணைகளுக்காக மாட்ரிற்க்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். ஸ்பெயின் அதிகாரிகள்2001ஆம் ஆண்டு முதல் தாங்கள் கைது செய்த நபர்களில் 8 பேர் அமெரிக்காவின் செப்ரெம்பர் 11ஆம் திகதி தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்று குறிப்பிட்டுள்ளனர்.(உ-2)

## தீ மேலும் பரவலாமென அச்சம்

(கான்பரா)
அவுஸ்திரேலியாவில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீ மேலும் பல இடங்களுக்குப் பரவலாமென அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.


தற்போது ஏற்பட்டுள்ள காட்டுத்தீயினால் வெப்பநிலை 40 பாகை செல்சியசாக உயர்ந்துள்ளதென அவுஸ்திரேலிய தகவல்கள் கூறுகின்றன.(பி-2)

# பிரான்ஸ்-ஜேர்மன் நாடுகளின் தடுமாற்றமான கொள்கை
## சாடுகிறார் ஜோர்ஜ் புஷ்

(வாஷிங்டன்)
சதாம் ஹுசைனுக்கு எதிரான கடும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்காமல் தடுமாற்றமான கொள்கையைப் பின்பற்றினால், அதனால் வரும் விளைவுகளுக்கு பிரான்சும், ஜெர்மனியும் பொறுப்பாக இருக்க வேண்டும் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ் கடுமையான எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

ஈராக் பிரச்சினையை பேச்சுக்கள் மூலமே தீர்க்க வேண்டும் எனவும், தாக்குதலை தாங்கள் ஆதரிக்கவில்லையென்றும் மேற்படி இரு நாடுகளும் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையை அடுத்தே புஷ் இவ்வாறு ஆவேசமான குரலில் பேசியிருக்கிறார்.

ஐ.நா சோதனையாளர்களுக்கு மேலும் அவகாசம் கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை கண்டித்த



புஷ், சதாம் ஹுசைனுக்கு இது வாய்ப்பாகப் போய்விடும். ஐ.நா சோதனையாளர்களுக்கு அவர் இன்னமும் ஓட்டங்காட்ட வசதியாகிவிடும் என்றார்.

ஈராக்கியர்கள் இரசாயன, உயிரியல் ஆயுதங்களைப் பயன்படுத்தினால் ஈராக்கிய இராணுவ அதிகாரிகள் போர்க் குற்றம் புரிந்தவர்களாகக் கருதப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும் என்றார் புஷ். (பி)

மேற்கு கரைப்பகுதியில்

# பலஸ்தீனர் சுட்டு மூன்று இஸ்ரேலியர் பலி

(டெல்அவிவ்)
மத்திய கிழக்கின் மேற்குக் கரையின் ஹெப்ரோன் நகருக்கு அருகே உள்ள யூதக்குடியேற்றம் ஒன்றின் எல்லைப்பகுதியில், பலஸ்தீன துப்பாக்கி நபர்கள் நேற்று 3 இஸ்ரேலியர்களை சுட்டுக்கொன்றுள்ளனர்.

இச்சம்பவத்தை இஸ்லாமிய ஆயுத இயக்கமான கமாஸ் மற்றும் பலஸ்தீன ஜனாதிபதி ஜஸீர் அரபாத்தின் ஷராப் பிரிவின் உபபிரிவான அல்அஹ் ஷாத்தியா பிரிவினரும் பொறுப்பேற்றுள்ளனர்.

எனினும் இத்தாக்குதல் எதற்காக நடத்தப்பட்டது என்று இதுவரை சம்பந்தப்பட்டவர்கள் கூறவில்லை.




ஈராக் மீது போர் தொடுக்க அமெரிக்கா ஆயத்தமாகிறது. இந்த நிலையில் அமெரிக்காவின் சான் அந்தோனியாவில் ஈராக் மீது அமெரிக்கா நடத்தத் திட்டமிட்டுள்ள தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நடைபெற்ற பேரணியில் கலந்து கொண்டவர்கள்

## ஹாக்கெற் இயக்கம் குற்றச்சாட்டை நிராகரித்தது

(புதுடில்லி)
இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் பொலிஸ் சேவையில் கடமையாற்றும் முஸ்லிம் பெண்களை சேவையில் இருந்து விலக்குமாறு இஸ்லாமியப் பிரிவினவாதிகள் காலக்கெடுவொன்றை விதித்துள்ளதாகப் பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளதை, சம்பந்தப்பட்ட இயக்கம் நிராகரித்தது.

முஸ்லிம் பெண்கள் பொலிஸ் சேவையில் இருந்து விலக்குமாறு கூறும் சுவரொட்டிகளை பாகிஸ்தானுக்கு ஆதரவான ஹாக்கெற் ஈஜசார் இஸ்லாமிய இயக்கமே ஒட்டியுள்ளதாகப் பொலிஸார் குற்றம் சாட்டியுள்ளனர்.



கனடாவில் தற்போது வெப்பநிலை மிகவும் குறைந்துள்ளது. இதனால் அங்கு வாழும் பறவைகள் மற்றும் விலங்குகளின் நிலை மிகவும் பாதிப்படைந்துள்ளது. இதனால் நிரையே தங்களது இருப்பிடமாக்கிக் கொண்டுள்ள வாத்துக் கூட்டங்கள்.

## இறந்து போன பெற்றோரின் சடலங்களை மறைத்து விட்டு பென்ஷன் பெற்றுவந்த ஆசாமி

(டோக்கியோ)
பெற்றோரின் சடலத்தை மறைத்து வைத்து அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பென்ஷனை வாங்கி மோசடி செய்துள்ளார் 50 வயது நபர்.

ஜப்பான், நையிகடா மாநிலத்தில் உள்ள நீசு நகரில் இந்த மோசடி நடந்துள்ளது.

இவரது பெயர் டோமோகி தனாபி தனது வீட்டில் பெற்றோரின் சடலத்தை புதைத்து வைத்து 4 ஆண்டுகளாகவே பென்ஷனை வாங்கி செலவழித்து வந்துள்ளார்.

தனாபியின் தந்தை ஷிகியோ, தாயார் தேரு இருவரின் நடமாட்டம் இல்லாததை அறிந்த அக்கம் பக்கத்தவர் பொலிஸாருக்கு இது பற்றித் தெரிவித்தனர்.

இவரது வீட்டைப் பொலிஸார் சோதனையிட்ட போது தாய்,தந்தை இருவரின் சடலமும் புதைத்து வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

2002ஆம் ஆண்டு ஜுன்முதல் டிசம்பர் வரை மட்டும் தனது தந்தையின் வங்கிக் கணக்கிலிருந்து ரூ.3.5 லட்சம் பென்ஷன் எடுத்துள்ளார் தனாபி.

இந்நிலையில் தனாபியின் பெற்றோர் கொல்லப்பட்டனரா அல்லது இயற்கை மரணம் அடைந்தனரா என்பது குறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (பி)

# கண்காணிப்பு குழு புதிய தலைவர் நியமன பின்னணியில் அரசு புலிகள்

## பணி நிறுத்தத்திற்கு வழிவகுத்த உயர் பாதுகாப்பு வலய விவகாரம்

(கொழும்பு)

**அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் விடுத்த கோரிக்கையை அடுத்தே இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவராக இதுவரை பணியாற்றிய நோர்வே நாட்டவரான மேஜர் ஜெனரல் ரொண்ட் பியுறு ஹெவ்டேயின் பணி நிறுத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.**

இதனை நோர்வே தகவல்கள் உறுதி செய்துள்ளன.

இலங்கையின் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணிகளை விரிவுபடுத்தவும் அதனைக் கட்டியெழுப்பவும் மேஜர்ஜெனரல்ரொண்ட்பியுறு ஹெவ்டே பாரிய பங்களிப்பைச் செய்துள்ளார்.

அத்துடன், யுத்த நிறுத்த உடன்படிக்கை கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி நடைமுறைக்கு வந்ததில் இருந்து மிகுந்த நெருக்கடியான காலகட்டத்தில் யுத்த நிறுத்த கண்காணிப்புப் பணிகளை அரசு -புலிகள் ஒத்தாசையுடன் சரிவர நடைமுறைப்படுத்தியதன் மூலம் இரு தரப்பினரின் பாராட்டையும் நம்பிக்கையையும் பெற்றிருந்தார்.

இந் நிலையில் வடபகுதியின் அதி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக இவர் அண்மையில் வெளியிட்ட கருத்து விடுதலைப் புலிகளின் கடும் விமர்சனத்துக்கு இலக்காகியதுடன் அரசு-புலிகளுக்கிடையில் நெருக்கடி நிலையை ஏற்படுத்தவும் காலாய் அமைந்து விட்டார் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகியிருந்தார்.

இது தொடர்பில் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஹெவ்டேக்கு நீண்ட கண்டனக் கடிதம் ஒன்றினை எழுதியிருந்தமையும்,

அதில், அதியுயர் பாதுகாப்பு வலயத்தை நியாயப்படுத்தும் கண்காணிப்புக் குழுவின் போக்கு மிகுந்த ஏமாற்றத்தை தருவதாக சுட்டிக்காட்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஹெவ்டே எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை வன்னியில் சந்தித்து யுத்த நிறுத்த மீறல்கள், கண்காணிப்புக் குழுவின் எதிர்கால நடவடிக்கைகள், மோதல் தவிர்ப்பு, உப குழு கலைக்கப்பட்டதையடுத்து அதன் கடமைகளை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது ஆகியன குறித்து ஆராயவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைப் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் ரைக்கி டெலிசன் அடுத்த மாத இறுதியிலோ அல்லது மார்ச் மாத ஆரம்பத்திலோ தனது பொறுப்பை ஏற்கவுள்ளார்.

இது இவ்விதமிருக்க, அமைதி முயற்சிகள் தொடர்பாக ரொண்ட் பியுறு ஹெவ்டே நோர்வே அரசுக்கு தொடர்ந்தும் ஆலோசனைகள் வழங்கி வருவார். (உ)

### நீடிக்கப்பட்டுள்ளது

பலரின் வேண்டுகோளுக்கிணங்க ஆறாம் தர மாணவர்களின் கட்டுரைப் போட்டி விண்ணப்ப திகதி 30-01-2003 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

### மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப் போட்டி.

**பரிசில்கள்**

1 ஆம் பரிசு ரூபா 500
2 ஆம் பரிசு ரூபா 250
3 ஆம் பரிசு ரூபா 150

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

★ அமரர் ச. அம்பிகைபாகன் (முன்னாள் அதிபர் யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி) அவர்கள் ஞாபகார்த்தமாக இப் பரிசில்கள் வழங்கப்படும்.

**போட்டியின் விதிகள்:**

★ ஆறாந்தரத்தில் இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப் போட்டியில் பங்கு பற்றலாம்.

★ கட்டுரையின் தலைப்பு ''எமது கிராமம்''

★ கட்டுரை 100 தொடக்கம் 125 சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.

★ புல்ஸ்காப்தாளில் ஒவ்வொரு தனிப் பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.

★ கட்டுரைகள் 30-01-2003ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி'' வலம்புரி, 15 வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின் வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

**இணைக்கும் பத்திரம்**

**கட்டுரைப் போட்டி இல-1**

மாணவர் முழுப் பெயர் ——————————

பாடசாலை ——————————

கற்கும் தரம் ——————

உறுதிப்படுத்துகிறேன் ——————

வகுப்பாசிரியர்

### பத்திரிகையாளர் மாநாடு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் அலுவலகத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அண்மைய யாழ். நிலைவரங்கள் தொடர்பான கருத்தரங்கும் பத்திரிகையாளர் சந்திப்பும் இடம்பெறவுள்ளது. (உ)

### பதவி உயர்வு

(புலோலி)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 12 கிராம உத்தியோகத்தர்கள் தரம்-1 ற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்:

எஸ். குணராஜா: ரி.வரதராஜன், என். தங்கத்துரை, எஸ். கந்தசாமி, கே. பரம்சோதி, எம். வேதாபரணம், எ. சூரியகுமார், ஆர் சோமசுந்தரம், வி. பாலசிங்கம், வி. மயில்வாகனம், வி. தியாகராஜா, எஸ் விஜயகுமார் ஆகியோரே பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (உ-52)

### பரு. பஸ் நிலையத்தில் பஸ்கள் தரிப்பதற்கு இடம் ஒதுக்கப்பட்டது

(புலோலி)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை பஸ் நிலையத்திற்கு பஸ்கள் தரித்து நிற்பதற்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதையடுத்து போக்குவரத்து சேவைகள் அவ்விடத்திலிருந்து நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ் இட ஒதுக்கீட்டை பருத்தித்துறை நகரசபை மேற்கொண்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை பஸ்நிலையத்தில் கடமையிலிருந்த நேரக்கணிப்பாளர், நடத்துநர் ஆகியோர் ஆட்டோ சாரதிகள் இருவரால் தாக்கப்பட்டனர்.

இச்சம்பவத்தை அடுத்து பஸ்நிலைய முகாமையாளர் எஸ். சமலநாதன் பஸ்தரிக்க இடம் ஒதுக்கி தருமாறு கேட்டதையடுத்து நகரசபை பஸ் நிலையத்திற்கு இட ஒதுக்கீடு செய்து எல்லை போட்டுள்ளது.

ஏனைய வாகனங்கள் இப்பகுதிக்கு செல்வது தடைவிதிக்கப்பட்டுள்ளதுடன், ஆட்டோ, மினிபஸ் மற்றும் ஏனைய வாகனங்களுக்கும் நகரசபை இட ஒதுக்கீடு செய்துள்ளது. (உ-52)

### 106 இலங்கையர் நாடு கடத்தப்பட்டனர்

(கொழும்பு)

வெளிநாடுகளில் சட்டவிரோதமாக தங்கி இருந்த 106 இலங்கையர்கள் இம் மாத நடுப்பகுதியில் நாடு கடத்தப்பட்டுள்ளனர் என உள்விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் போலிக் கடவுச்சீட்டு போலி விசா ஆகியவற்றை உபயோகித்து சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குச் சென்றவர்களாவர்.

இவர்களில் பெரும்பாலானோர் இத்தாலி மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் குடியேறி இருந்தனர்.

இவர்கள் அனைவரும் குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு தற்போது விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

இதேவேளை இலங்கையின் தென்கடல் பிரதேசத்தின் ஊடாக சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குச் செல்வோரைத் தடுத்து நிறுத்த விசேட பொலிஸ் பிரிவு ஒன்று ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## மேல் கொத்மலை திட்டம் அமுலானால் மக்கள் போராட்டம் வெடிக்கும்

### ஆறுமுகன் அரசுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

மேல் கொத்மலை நீர்மின் உற்பத்தித் திட்டத்தை அரசு முன்னெடுத்துச் செல்லுமானால் மக்கள் போராட்டம் வெடிக்கும் என வீடமைப்பு உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அரசிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற பங்களாதேஷ் தொழிற்சங்க மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது பற்றி அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில், மேல் கொத்மலை நீர்மின் உற்பத்தித் திட்டத்தை அரசு தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லுமானால் நாம் இலங்கை அரசிற்கு வழங்கி வரும் ஆதரவை மீள்பரிசீலனை செய்யும் நிலை ஏற்படும்.

இதேவேளை இது தொடர்பான அடுத்த கட்டச் செயற்பாடுகள் குறித்து, அமைச்சர் தொண்டமான் இலங்கை திரும்பியவுடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆராயும் என கூறப்படுகிறது. (உ-10)

# சமஷ்டி முறையிலான தீர்வே இலங்கைக்கு மிகப் பொருத்தமானது

## ஐரோப்பா சென்ற குழு நாடு திரும்பியபின் கூட்டாக கருத்து

(கொழும்பு)

**இலங்கைக்கு சமஷ்டி முறையிலான தீர்வு மிகவும் பொருத்தமானது என்று ஐரோப்பாவிற்கு விஜயம் மேற் கொண்டிருந்த அரச மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக தெரிவித்துள்ளனர்**

கடந்த 15 ஆம் திகதி ஐரோப்பாவிற்கு சமஷ்டி முறைபற்றி ஆராயச் சென்ற இவர்கள், 10 நாட்கள் ஐரோப்பிய நாடுகளில் தங்கியிருந்து சமஷ்டி முறைபற்றி ஆராய்ந்து விட்டு நேற்று நாடு திரும்பியுள்ளனர்.

இக்குழுவுக்குத் தலைமை வகித்த புனர்வாழ்வு புனரமைப்பு மீள்குடியேற்ற அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா இது தொடர்பாக கருத்து வெளியிடுகையில்,

நாங்கள் விஜயம் செய்த நாடுகளின் நிர்வாக அமைப்பு அவற்றின் அபிவிருத்திக்கு எந்த வகையிலும் உந்து சக்தியாகவும் அனுசரணையாகவும் இருந்து வருகிறது என்பதை நேரடியாக காணமுடிந்தது.

அத்துடன், 1970 ஆம் ஆண்டில் உலக சுயாட்சியை பெற்ற பெல்ஜியம் அதனை வெற்றிகரமாக சமஷ்டியை நடைமுறைப் படுத்தி வருகிறது.

இதேவேளை தற்போது இலங்கையில் மேற் கொள்ளப் பட்டுவரும் சமாதான முயற்சிகளுக்கு நாம் விஜயம் மேற் கொண்டுள்ள நாடுகள் அனைத்தும் தமது பூரண ஆதரவை வழங்கியுள்ளன என்று குறிப்பிட்டார்.

இது தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் செனிவிரட்ண தகவல் தருகையில்,

அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமாக அரசாங்கமும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஒரே கருத்தை கொண்டுள்ளன

இதே வேளை, எமது விஜயம் குறித்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவிற்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் விரைவில் அறிவிக்கவுள்ளோம் என்று குறிப்பிட்டார்

பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற அங்கத்தவர் சங்கைக்குரிய பத்தேகம சமித்த தேரர் கருத்து கூறுகையில்;

இதன்படி குறிப்பிட்ட ஒரு பகுதியில் வாழும் மக்கள் தங்களது பிரதேசத்தின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதில் தீர்மானங்களை மேற் கொள்ளும் உரிமையைக் கொண்டிருக்கிறார்கள்.

அத்துடன், அதிகாரப் பரவலாக்கல் என்பது உலகில் வெற்றிகரமாக மேற் கொள்ளப்பட்டு வரும் சிறந்த ஒரு அரசியல் முறையாகும் என்றார்.

பேரியல் அஷ்ரப் கருத்து வெளியிடுகையில், அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமாக நாட்டில் சகல கட்சிகளும் ஒரே விதமான கருத்தை கொண்டுள்ளன;

ஆயினும், மக்களின் கருத்துக்களின் அடிப்படையில் திருத்தங்கள் மேற்கொள்ளப் படுவது அவசியம் என்றார்:

(உ-10)

## ஆக்கத்திறன் போட்டி முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் சிறுவர் பாதுகாப்பு நிதியம் அண்மையில் நடத்திய பேச்சு, கவிதை, கட்டுரை, பாட்டு போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

மேற்படி போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் பெயர்கள் வருமாறு,

பேச்சு: (கீழ்ப்பிரிவு)

மு. நிவேதினி, இ. சிந்துஜா, லோ. மயூரதி

பாட்டு: (கீழ்ப்பிரிவு)

த. துஜீபா, நா. கோதஸ்ஜா, பு. நிவேகா:

கட்டுரை (மேற்பிரிவு)

சி. தவசீலன், க. சுஜித்காந், சி. சாரீபிகா.

கவிதை (மத்தியபிரிவு)

இ. தனுசிகா, செ. தயாளினி, ந. கீதா.

கட்டுரை (மேற்பிரிவு)

கு நிசாந்தினி, ப ஜனனி, சி. சிவரூபன்;

கவிதை (மேற்பிரிவு)

வா. ஞானசௌந்தரி, த. தாரணி.

கவிதை (விசேட பிரிவு)

சி. லவரஞ்சனி, இ. சங்கீதா, சி. சிவனேசன்;

(உ)

## கலந்துரையாடல்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட சிறுவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

(உ-258)

## கோபி அனானுக்கு கைதிகள் மகஜர்

(கொழும்பு)

நீண்டகாலமாக சிறையில் வாடும் தம்மை நிபந்தனையின்றி விடுவிக்க அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும்.

களுத்துறைச் சிறையில் உள்ள 84 தமிழ் அரசியல் கைதிகளும் கையெழுத்திட்டு ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனானுக்கு கடந்த வியாழனன்று அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ)

## பாழடைந்த வீட்டில் யுவதியின் சடலம்

(கொழும்பு)

ஏறாவூர் குடியிருப்பு என்ற பகுதியில பாழடைந்த வீடொன்றினுள் இருந்து சுமார் 20 வயது மதிக்கத்தக்க யுவதியின் சடலத்தை அப்பகுதி பொலிஸார் நேற்றுக் கண்டெடுத்துள்ளனர்.

இச்சடலத்துக்கு அருகில் உடுபுடைவைகள் அடங்கிய பையொன்றும் காணப்பட்டது

ஏறாவூர் வைத்தியசாலையில் இச் சடலம் அடையாளம் காணும் பொருட்டு வைக்கப் பட்டுள்ளது

இக் கொலைச் சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்:

(உ-8)

## விவசாய கருத்தரங்கு

(சண்டிலிப்பாய்)

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தினரால் அப்பகுதி விவசாயிகளுக்கான விவசாய கருத்தரங்கு ஒன்று இன்று காலை 9.30 மணிக்கு மேற்படி சம்மேளன அலுவலகத்தில் தலைவர் முதலியார் தலைமையில் நடைபெறவுள்ளது.

(உ-258)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப்பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

(உ-7/5)

## இலங்கையில் முதலிட முன்வருமாறு அழைப்பு

(கொழும்பு)

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளுமாறு டுபாயில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களிடம் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ கேட்டுக் கொண்டுள்ளார்.

மத்திய கிழக்கின் மூன்று நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள அமைச்சர் டுபாயில் நடைபெற்ற வர்த்தகப் பிரமுகர்கள் சந்திப்பின் போது இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது;

அவ்வறிக்கையில் மேலும். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நாட்டின் பொருளாதாரம் 5 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு தேவையான வசதிகளை பெற்றுக்கொடுக்க அரசு நடவடிக்கை மேற் கொள்ளும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)

## இலாப நோக்கற்ற அமைப்புகளுக்கு அவுஸ்திரேலிய தூதரகம் நிதியுதவி

(கொழும்பு)

இலாப நோக்கற்றுச் செயற்படும் பொது அமைப்புகள், அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு நேரடி உதவித் திட்டத்தின் கீழ் அவுஸ்திரேலிய தூதரகம் நிதியுதவி வழங்கவுள்ளது.

போர்ச்சூழல் காரணமாக தமது குடும்பத் தலைவனை இழந்து குடும்பப் பொறுப்பைச் சுமந்துள்ள பெண்கள், வன் செயல்களினால் பாதிக்கப்பட்டோர், சமூகச் சீரழிவுகளால் பாதிக்கப்பட்ட பெண்கள் மனித உரிமைகளைப் பேணும் அமைப்புகள், சமூகத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களுக்கான கல்வி, சுகாதார பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகிய வற்றுக்கே தலா இரண்டரை இலட்சத்துக்கு மேற்படாத நிதியை இவ் விதம் அவுஸ்திரேலியா வழங்கவுள்ளது;

சம்பந்தப்பட்ட அமைப்புகள், நிறுவனங்கள் தங்களது வேலைத்திட்டங்கள் தொடர்பான அறிக்கையினை சமர்ப்பிப்பதன் மூலம் இவ்நிதியுதவியைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவுஸ்திரேலிய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது;

(உ-3)

## தேசிய கீதத்தை மாற்றும் எண்ணம் இல்லை

### அமைச்சர் அலுக் அலுவிகார அறிவிப்பு

(கொழும்பு)

தேசிய கீதத்தில் மாற்றம் கொண்டு வரும் திட்டம் எதுவும் அரசாங்கத்துக்கு இல்லை என உள் நாட்டு அலுவல்கள் அமைச்சர் அலுக் அலுவிகார அறிவித்துள்ளார்.

எதிர் வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி நடைபெறவுள்ள சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் போது தற்போதுள்ள தேசிய கீதமே நாடளாவிய ரீதியில் இசைக்கப்படவுள்ளது.

தேசிய கீதத்தை மாற்றியமைத்து அதனை ஒலிப்பதிவு செய்வதற்கு சில சக்திகள் நடவடிக்கைஎடுத்து வருகின்றதாக அண்மையில் செய்திகள் வெளியாகியுள்ளதுடன், முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன:

இதேவேளை, தேசிய கீதத்தை மாற்றுவது குறித்து அவசர முடிவுகள் எதனையும் அரசு மேற்கொள்ளக் கூடாதென ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவை எச்சரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## பொ.ஐ. முன்னணி வடக்கு மக்களின் ஆதரவைப் பெற மகிந்த வழிவகை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாழும் பொது மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள பொதுஜன ஐக்கிய முன்னணி வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரித்துச் செயற்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதிக்கு சிபாரிசு செய்யவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவிக்கையில்:

எனதுயாழ். விஜயம்குறித்து ஜனாதிபதிக்கும் அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பிக்கவுள்ளேன்

எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள எதிர்க்கட்சிப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் எனது யாழ் விஜயம் குறித்து விளக்குவேன்;

1982 ஆம் ஆண்டு நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்பில் சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்ட ஹெக்டர் கொப்பேகடுவவுக்கு யாழ். மாவட்டத்தில் மாத்திரம் 10 இலட்சம் வாக்குகள் கிடைத்தன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது;

எனது யாழ். விஜயத்தின் மூலம் அமைச்சர் தி. மகேஸ்வரன் தனது தேவைகளையும் பூர்த்தி செய்துகொள்ளத் திட்டமிட்டிருந்தார்:

இதனாலேயே சில இடங்களுக்குச் செல்வதைத் தவிர்த்துக்கொண்டேன்,

எனது யாழ். விஜயத்தின் போது, ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிப் பொறுப்பேற்று ஒரு வருடமாகியும் அங்கு அபிவிருத்தித் திட்டங்கள் எதனையும் முன்வைக்கவில்லை என்பதை அறிந்து கொள்ள முடிந்தது என்று குறிப்பிட்டுள்ளார். (உ)

# நீதியரசராக சத்தியப் பிரமாணம்

(கொழும்பு)

உச்ச நீதிமன்ற நீதியரசராக நீதிபதி என்.ஏ.சி.என்.த. சில்வாவும், நீதிபதிகளான ஷிரானி திலகவர்த்தனா மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவராகவும், ஜீ.ஏ.எல். அபேவர்த்தன மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராகவும் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். (உ-3)

# அறிவியல் கருத்தரங்கு

(ஊர்காவற்றுறை)

வலிகாமம் தெற்கு-உடுவில் பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒன்றியம் மாதந்தோறும் அறிவியல் கருத்தரங்குகளை நடத்தவுள்ளது.

இந்த வகையில் முதலாவது அறிவியல் கருத்தரங்கு இன்று பி.ப 3.30 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இதில் குடும்பப் பொருளாதாரக் கட்டமைப்பு என்ற விடயத்தில் யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் மா.சின்னத்தம்பி கருத்துரை வழங்கவுள்ளார். (உ-75)

# கிரிக்கெட் போட்டி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் இடம்பெற்று வரும் குழுப் போட்டிகள் வரிசையில், இன்று ஊர்காவற்றுறை பொது மைதானத்தில் மென்பந்து கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளது. (உ-75)

# ஆயுத தாரிகள் ஆட்டோவில் சென்ற பெண்மீது தாக்கு

(கொழும்பு)

ஆட்டோவில் பயணஞ்செய்த பெண்ணை கூரிய ஆயுதத்தினால் வெட்டிய ஆயுதபாணிகள் துப்பாக்கிப்பிரயோகமும் செய்துள்ளனர்.

இச்சம்பவம் இங்கிரிய அந்தபன் கொட பகுதியில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

காணித்தகராறே இதற்குக் காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது. (உ)

# ஊர்காவல் படைவீரர் படுகாயம்

(கொழும்பு)

மொறவெவ பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவரின் ரி-56 ரகத் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் ஊர்காவல் படை வீரர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் தவறுதலாக இடம்பெற்றதா அல்லது திட்டமிட்டுச் செய்யப்பட்டதா என்பது குறித்து மொறவெவ பொலிஸார் ஆராய்ந்து வருகின்றனர்.

படுகாயமடைந்த ஊர்காவல் படை வீரரின் நிலை மோசமடைந்திருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ)

# பிறந்த திகதிக்குப் பொருந்தப் பெயரமைத்து சிறந்ததாக வாழ்க்கையைச் சீர் செய்யுங்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

### உடல் எண்~6 கூட்டு எண்ணாகிய உயிர் எண்~2

6,15,24 போன்ற திகதியில் பிறந்து திகதி, மாதம், வருடம் ஆகிய இம்மூன்றையும் கூட்டி வருகிற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 2 வருமேயானால் இவர்கள் சுக்கிரன், சந்திரன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்கள் பார்ப்பதற்கு சுமாரான உயரமுடையவராகவும், ஓரளவு பருத்த சரீரமுடையவராகவும் இருப்பர். இளமையில் சதைப்பற்று இல்லாதவராக இருந்தாலும் வயது ஏற, ஏற பெருத்து விடுவர். பார்ப்பதற்கு கவர்ச்சியானதோற்றமும் தூய்மையான ஆடையும் கொண்டவர். தலையை அலங்காரம் செய்வதில விருப்பம் உடையவர்கள். எப்பொழுதும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்ற ஆர்வம் உடையவர்கள்.

இவர்களுடைய மனநிலை அடிக்கடி குழம்பிப் பின் தெளிவடையும். கிரகங்களில் சந்திரன் வளர்ந்து தேய்வது போல் இவர்களது மனநிலையும் ஏற்ற இறக்கமுமாகவே இருக்கும். சிலர் இயற்கையிலேயே வசதிபடைத்தவராக இருப்பர். இன்னும் சிலர் தமது தனித்திறமையால் முன்னேற்றம் காண்பர். வாதம் செய்வதிலும், குறுக்குக் கேள்வி கேட்பதிலும், சமாதானம் செய்வதிலும் திறமை மிக்கவர்களாக விளங்குவர். இவர்களுக்குப் பெயர் பொருத்தமானதாக அமையுமேயானால் வீடு, நிலம், வாகனம், தொழில் போன்றவைகள் அமையப் பெற்றுச்சிறப்பாக விளங்குவர்.

இன்னும் சில்ர் எழுவதாலும், வாதம்செய்வதாலும், வழக்குகளைத தீர்த்து வைப்பதாலும், வைத்தியம் பார்ப்பதாலும் பொருளீட்டுவர். ஆனால் பெயர் பொருத்தமின்றி அமைந்து விட்டால் எல்லா வாய்ப்புகள் இருந்தும் கெட்ட பழக்கங்களிற்கு அடிமையாகி, மன நிலை பாதிக்கப்பட்டு, கெட்டமுடிவு எடுக்கும் சூழ்நிலை உண்டாகும். இதனால் பெயரைத் தனது பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாக மாற்றி அமைத்துக் கொள்வது அவசியம்.

புகழ்ச்சிக்குமயங்கும் இவர்கள், பிறர் தனது குறையைச் சுட்டிக்காட்ட முனைந்தால் அவர்களை வெறுப்பர். இதனால் தன் குறையை உணர்ந்து தானே திருந்திக்கொள்ள வேண்டும். பிடிவாதக் காரர்கள் போல் காட்சியளிக்கும் இவர்கள் இளகிய மனம் கொண்டவர்களே! தன்னால் முடிந்தவரை தன்னைச் சார்ந்தவர்களுக்கு உதவ முன்வருவர். ஆனால் எவ்வளவு உதவி செய்தாலும் நன்றி கெட்ட உலகம் என்று அடிக்கடி கூறுவர். இப்படிப்பட்ட இவர்களுக்கு ஆண்டவன் எப்பொழுதும் அருள் புரிந்துகொண்டே இருப்பார்.

மலைப் பிரதேசங்களையும், நீர்த்தேக்கங்களையும், நீர் வீழ்ச்சிகளையும், பசுமையான இடங்களையும் கண்டுகளிப்பதால் இவர்களது மனம் அமைதி பெறும். திடீர் திடீர் என்று இவர்கள் மனம் எல்லாவற்றையும் வெறுக்கும் ஒரு பொருளை வேகமாக விரும்பி, அதே நேரத்தில் வெறுத்து விடுவர். இவர்களுக்குப் பிறந்த திகதிக்குப் பொருத்தமான பெயர் அமையாவிட்டால் காமுகர்களாகவோ, போதைப் பொருளுக்கு அடிமையானவர்களாகவோ, சூதாட்டக்காரர்களாகவோ மாறிவிடுவர். இதனால் பெயரைப் பொருத்தமானதாக மாற்றி அமைத்துக்கொள்வது அவசியம்.

எதையும் சந்தேகிக்கும் மனப்

## சோதிட பலன்

பான்மை கொண்டவர்களான இவர்கள் எக்காரியத்தையும் தானே நேரில் செய்யவேண்டும் என்ற பிடிவாத எண்ணம் உடையவர்கள். சட்டம், சாஸ்திரம், கணிதம், ஜோதிடம் போன்றவற்றில் ஆர்வம் உடையவர்கள். எப்பொழுதும் எதையாவது ஆராய்ந்து கொண்டே இருப்பர். தனியாகச்செல்கின்ற போது தனக்குள் பேசிக்கொண்டே செல்வர். இவர்களுடைய பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாகப் பெயர் அமையுமேயானால் நல்ல ஆரோக்கியம், நல்ல வாழ்க்கைத்துணை, நல்ல குழந்தைகள், நல்ல செல்வம் பெற்றுவாழ்வர்.

### தொழில

இவர்களுக்கு பச்சை நிறம் கொண்ட அனைத்துத்தொழிலும் இலாபம் தரக்கூடியதே. ஆடம்பரப் பொருட்கள், ஆபரணங்கள், கமிஷன், கண்ட்ராக்ட், ஏஜென்சீஸ், வாகனம் போன்றவற்றால் இலாபம் பெறுவர்.

### நோய்

இவர்களுக்கு மனவியாதி, நீர் சம்பந்தமான வியாதி, தோல் வியாதி, மூட்டுவலி, கண் சம்பந்தப்பட்ட வியாதிகள் வந்து நீங்கும்.

### பெயர் அமைக்கும் முறை

இவர்கள் சுக்கிரன், சந்திரன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்ததால், சுக்கிரன் ஆதிக்கமான 15,24,33, 42,60,69 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொள்வது சிறப்பாகும்.

### பின்பற்ற வேண்டியவை

யோகமான எண்-6,7. யோகமான திகதிகள்-6,15,24; 7,16,25; 1,10,19,28. யோகமான நிறம்-பச்சை, வெளிர் நீலம். யோகமான மோதிரக் கல்-மரகதம்,ஜெற், டைகர்ஐ, மூன்ஸ்டோன். ஆகாத திகதிகள்-3,12,21,30. ஆகாத நிறம்-சிவப்பு,றோஸ், ஆரஞ்சு, கத்தரிப்பூ நிறம்.

### உடல் எண்~6 கூட்டு எண்ணாகிய உயிர் எண்~3

6,15,24 போன்ற திகதிகளில் பிறந்து, திகதி, மாதம், வருடம் ஆகிய இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 3 வருமேயானால் இவர்கள் சுக்கிரன், குரு போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர். சுக்கிரனை அசுர குரு என்றும், குருவைத் தேவ குரு என்றும் அழைப்பர். இந்த இரண்டு கிரகங்களும் ஒன்றுக்கொன்று ஒத்துப்போகாததால், இந்த இரு கிரகங்களின் ஆதிக்கதில் பிறந்தவர்கள் ஒரு பிரச்சினை வாதியாகவே வாழ்கின்றனர்.

இவர்களது உடல் எண்ணுக்கு உயிர் எண் எதிரியாகவும், உயிர் எண்ணுக்கு உடல் எண் எதிரியாகவும் இருப்பதால், தனக்குத் தானே தீங்கைத் தேடிக் கொள்ளும் மனிதர்களாக விளங்குகின்றனர். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமைந்துவிட்டால் எல்லாத் தீயவைகளும் குறைந்து மென்மேலும் முன்னேற்றப் பாதையை நோக்கி விரைவர். ஆனால் பெயர் பொருத்தமின்றி இருக்குமேயானால் வசதி படைத்த குடும்பத்தில் பிறந்தவர் கூட பல்வேறு பிரச்சினைக்குள்ளாகி கண் கலங்கி நிற்பதை நான் கண்டிருக்கிறேன்.

இவர்கள் செய்கின்ற ஒவ்வொரு செயலும் மற்றவர்களுக்குக் கெட்டதாகவே தோன்றும். இதனால் மனவேதனைப்பட்டு வாழ்க்கையை வெறுப்பர்.ஆனால் பெயர் பொருத்தமானதாக அமைந்து விட்டால் மேற்குறிப்பிட்ட கெட்ட பலன்கள் எல்லாம் விலகி மென்மேலும் நல்ல முன்னேற்றத்தை அடைவர். பெயர் பொருத்தமானதாக அமையப் பெற்றவர்கள் தொழிலாலும், உத்தியோகத்தாலும் உயர்ந்த நிலை அடைவர்.

பிறருக்கு உதவும் மனப்பான்மை கொண்ட இவர்கள் திடீரென்று நாம் அவருக்குச் செய்யும் உதவியால் சிக்கலில் மாட்டிக்கொள்வோமோ என்று அஞ்சுவர். இவர்கள் தூர தேசப் பயணங்களையும், சரித்திரப் புகழ் பெற்ற இடங்களைப் பார்ப்பதிலும் இயற்கைக் காட்சிகளை ரசிப்பதிலும் கடலோர காட்சிகளைக் கண்டு களிப்பதிலும் ஆர்வம் உள்ளவர்களாக விளங்குவர். இவர்களுக்குப் பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் குடும்ப வாழ்க்கை ஒரு குழப்பம் மிகுந்த வாழ்க்கையாக அமைந்துவிடும். சிலருக்குப் பெண்ணாக இருந்தால் ஆண்களாலும், ஆணாக இருந்தால் பெண்களாலும் மனவேதனை வந்துவிடும். இன்னும் சிலர் ஏதோ நமக்கு குறை இருக்கின்றது என்பதை எண்ணி மனத்திருப்தி இன்றி வாழ்வர்.

ஆனால் பெயர் பொருத்தமானதாக அமைந்துவிட்டால், மேற்குறிப்பிட்ட கெட்ட பலன்கள் இல்லாது, எல்லாப் பாக்கியங்களையும் பெற்று சுகமான வாழ்க்கைநடத்துவர். இவர்களுக்குச் சட்டம், கணிதம், தத்துவம், ஜோதிடம், சமயம் போன்றவற்றில் ஆராய்ச்சி இருக்கும். இவர்களுக்குத் தீர்க்கமான யோசனையும், பேரறிவும் இருந்தும் தன்னை அறியாமல் தீய காரியங்களில் இறங்கிவிடுகின்றனர். இதனால் நல்லவர்களாக வாழ முயற்சி செய்தாலும் கெட்ட பெயர் எடுக்கும் சூழ்நிலை அமைந்து விடுகிறது. இவர்களது பெய்ரை பிறந்த திகதி, எண்களுக்குப் பொருத்தமானதாக மாற்றி அமைத்துக்கொண்டால் வாழ்க்கையில் பெறக்கூடிய பாய்க்கி

**ஆர்.ஐ.துரைமுருகர்**

யங்கள் அனைத்தும் பெற்று, நல்ல ஆரோக்கியம், நல்ல வாழ்க்கைத் துணை, நல்ல குழந்தைகள், நல்ல செல்வம் பெற்றுவாழ்வர்.

### நோய்

இவர்களுக்கு மனவியாதி, இருதயவலி, மூட்டுவலி, பல், கண்நோய், முடி உதிர்தல் போன்றவைகள் வந்து நீங்கும். பெயரைப் பொருத்தமானதாக அமைத்துக் கொண்டால் மனவியாதி வராது.

### தொழில்

இவர்களுக்கு ஆடம்பரப் பொருட்களை வியாபாரம் செய்வதன் மூலமும், ஜவுளிக்கடை, தொழிற்சாலை, கமிஷன், ஏஜென்சீஸ், கலை சம்பந்தமான தொழில் போன்றவற்றால் இலாபம் பெறுவர்.

### பெயர் அமைக்கும் முறை

சுக்கிரன், குரு ஆதிக்கத்தில் பிறந்த இவர்களுக்கு சூரிய ஆதிக்கமான 19,37,46,64 போன்றவற்றிலும், செவ்வாய் ஆதிக்கமான [illegible] 37,45 போன்றவற்றிலும் பெயரை அமைத்துக் கொள்வது சிறப்பாகும்.

### பின்பற்றவேண்டியவை

யோகமான எண்-1,19. யோகமான திகதிகள்-1,10,19,28; 9,18,27. யோகமான மோதிரக்கல்-தங்க புஷ்பராகம், கனகபுஷ்பராகம். யோகமான நிறம்-வெளிர்மஞ்சள், வெளிர்நீலம். ஆகாத திகதிகள் இல்லை. ஆகாத நிறம் இல்லை.

(தொடரும்)

# முஸ்லிம்களின் எதிர்காலம் ஏனைய சமுகங்களுடன் இணக்கமாக வாழ்வதிலேயே தங்கியுள்ளது

## ஊடகத்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)



போரைவிட சமாதானத்தைக் கட்டிக்காப்பது மிகவும் கடினமானது. ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் நேற்று முன்தினம் முஸ்லிம் இளைஞர் அமைப்பின் பொது நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்; சமாதானத்தை ஒரு சில நாட்களில் அடைந்துவிட முடியாது.

தற்போது இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகள் இதயசுத்தியுடன் நடைபெற்று வருகின்றன.

இதனால் ஒரு சில நாட்களில் சமாதானத்தை அடைந்துவிடலாம் என மக்கள் எண்ணுவது தவறு.

முஸ்லிம் மக்கள் பிறர் சமூகத்தினரோடு இணக்கமாக வாழ்வதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. எனவே, இது விடயத்தில் முஸ்லிம் மக்கள் மிகவும் அவதானத்துடன் நடக்க வேண்டும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்து பேசுகையில்; இரு தசாப்த காலங்களாக வடக்கு-கிழக்கு பகுதிகளிலுள்ள மக்கள் யுத்த அனர்த்தங்களுக்கு முகங் கொடுத்து வந்துள்ளனர்.

இதேவேளை, இவ் யுத்தம் காரணமாகவே தெற்குப் பகுதி மக்கள் பல கஷ்டங்களை அனுபவித்துள்ளனர் என்பதனை ஊடகங்களினாலேயே எடுத்துரைக்க முடியும்.

சுருங்கக் கூறின், போர் என்ற பெரு விருட்சம் நாட்டிலுள்ள அனைத்து இனங்களையும் ஏதோ ஒரு வகையில பாதிப்புக்குள்ளாகி உள்ளது.

எனவே, இப்போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்குடன் ஒவ்வொரு இன மக்களும் விட்டுக் கொடுப்புக்களுடன் செயற்படவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

(உ-10,8)

# மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதி சொற்ப நேரத்தில் மரணம்

(கொழும்பு)

மரண தண்டனைத் தீர்ப்பு அளிக்கப்பட்ட நபர் ஒருவ்ர், தீர்ப்பு அறிவிக்கப்பட்ட ஒரு சில நிமிடங்களில் நீதிமன்றத்திலேயே மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் மாத்தளை மேல் நீதிமன்றத்தில் நீதிபதி சுனில் ராஜபக்ஷா முன்னிலையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இச்சம்பவவம் பற்றி தெரியவருவதாவது; மாத்தளை மாவட்டத்தில் உள்ள ஊறு பக்க கிராமவாசியான இந்நபர் 1993 ஆண்டு காலப்பகுதியில், நபர் ஒருவரைக் கொலை செய்தார் என்ற குற்றத்திற்காகவே நீதிபதி மரணதண்டனை வழங்கினார்.

நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டு சிறைச்சாலைக்கு பொலிசாரினால் அழைத்துச்செல்ல முற்பட்ட போதே அவர் மரணமடைந்துள்ளார். (உ-8)

## சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

உயர் இந்து கௌரவ குடும்பம் சதயம், 8 செவ்வாய் (பாவம் குறைவு) 43 வயது. சொந்த நிறுவனம் நடத்திவரும் விவாகரத்துப் பெற்றவருக்கு தகுந்த மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும். குறிப்பு உட்பட சகல விபரங்களுடனும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: விளம்பர இல-342, மே/பா. வலம்புரி, யாழ்ப்பாணம். (6493)

# இன்று ஒரு தகவல்

## உண்மை வீரம் எது?

ஒரு வீரன் எப்படி இருப்பான்?இந்தக் கேள்விக்கு உங்கள் பதில் என்ன?வீரன் என்றால் அவன் பெரிதாக மீசை வைத்திருப்பான். கையிலே கத்தி வைத்திருப்பான். முழங்கைக்கு மேலே தாயத்துக்கட்டியிருப்பான். கண்கள் சிவப்பாக இருக்கும். ஆள் பயில்வான் மாதிரி இருப்பான். அவன்தான் வீரன். இப்படித்தான் நாமெல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் வீரனென்பவன் அவன் இல்லை.

ஒரு ராஜா ஒரு நாள் தன்னுடைய மந்திஜரியைப் பார்த்துக் கேட்டார்.'நமது தேசத்தில் இருப்பவர்களில் வீரன் யார்? கோழை யார் என்று சொல்ல முடியுமா?'என்று.உடனே அந்த மந்திரி கோழைகள் யார்? வீரர்கள் யார்?என்பதற்கு விளக்கம் கொடுத்தார்.கோழை யார் தெரியுமா? மற்றவர்களுடைய பொருள் நமக்குக் கிடைக்குமா? என்கின்ற நினைப்பினிலேயே இருக்கிறவன். முயற்சியே செய்யாதவன் பாடுபட்டு உழைக்காதவன், சிரமப்பட்டு வேலை செய்து பிழைக்க விரும்பாதவன். குடும்பத்தைக் காப்பாற்ற முடியாமல் சந்நியாசியாகப் போகிறேன் என்று சொல்கிறவன். லஞ்சம் வாங்குபவன் என்பவர்கள் எல்லோரும் கோழைகள்.

சரி அப்படியென்றால் வீரம் உள்ளவர்கள் யார்? தன்னம்பிக்கையோடு உழைக்கிறவன். தன்னுடைய உழைப்பிலிருந்து கிடைக்கிற பணத்தைச் சிக்கனமாகச் செலவு பண்ணித் தன்குடும்பத்தைக் காப்பாற்றுபவன், சுயமுயற்சி உள்ளவன, எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பவன், இவர்கள் எல்லோரும் வீரம் உள்ளவர்கள். இது அமைச்சருடைய விளக்கம். இந்த விளக்கத்தைக் கேட்டார் இராஜா.

''சரி அமைச்சரே! நீங்கள் சொல்வதெல்லாம் சரி. கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் இதை நான் அனுபவத்தில் பார்த்தால்தான் நன்றாக இருக்கும். நமது தேசத்தில் இதற்கு யாரையாவது உதாரணம் காட்ட முடியுமா? என்று கேட்டார். காட்டுகிறேன்!என்று சொன்னார் அமைச்சர். கொஞ்சநாட்கள் ஆகின.

அந்த இராஜாவுக்குப் பிறந்த நாள் வந்தது. அரண்மனையில் அதை முன்னிட்டு ஒருவாரம் விருந்து. பொதுமக்கள் எல்லாரும் எந்த வேறுபாடும் இல்லாமல் வந்து விருந்து சாப்பிட்டுப் போக வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அரண்மனை விருந்தென்றால் மக்கள் சும்மா இருப்பார்களா? கூட்டம் கூட்டமாக அரண்மனைக்குப் போனார்கள். விருந்து சாப்பிட்டார்கள் தினமும் கோலாகலமாக இது நடந்து கொண்டிருக்கிறது.

அந்தச் சமயத்தில் ஒருநாள் அந்த இராஜாவும், மந்திரியும் வெளியே உலாவப் போனார்கள். ஊருக்கு வெளியே ஒரு வயதான ஆள் வயலில் வேலை செய்து கொண்டிருந்தான். அவன் இவர்களைத் திரும்பிக் கூடப்பார்க்கவில்லை. தன்பாட்டுக்குத் தன் வேலையில்லேயே கண்ணும் கருத்துமாக இருந்தான். இராஜாவும்,மந்திரியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். அந்த மந்திரி மெதுவாக அந்த ஆளிடம் போனார்.ஏனையா பெரியவரே! அரண்மனையிலே விருந்து நடக்கிறதே அது உனக்குத் தெரியாதா ஜனங்கள் எல்லோரும் போய்ச்சாப்பிட்டு விட்டு வந்துகொண்டிருக்கிறார்கள். நீயும் போய் வயிறாறச் சாப்பிட்டு வரவேண்டியது தானே! என்றார்.

அதற்கு அந்த ஆள் 'அரண்மனையில் விருந்து நடப்பது எனக்கும் தெரியும்.நீங்கள் சொன்னதற்கு நன்றி. இருந்தாலும் என்கையால் உழைத்து அதனாலே கிடைக்கிற சொற்ப வருமானத்தில் சாப்பிடுகிற சாதாரண சாப்பாடே எனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும். அரண்மனை விருந்தைவிட இதுதான் எனக்குப் பெரிது. அதுவுமல்லாமல் அரண்மனையில் ஒரு வாரத்துக்கு வேண்டுமென்றால் விருந்துச் சாப்பாடு போடுவார்கள். அதன்பின் என்ன செய்வது? என்று சொல்லிவிட்டு தன்னுடைய வேலையைக் கவனிக்க ஆரம்பித்தார். இப்போது அந்த அமைச்சர் அந்த இராஜாவைப் பார்த்தார். என் வாழ்நாளிலேயே நான் பார்க்கிற வீரம் உள்ள ஆள் இவர் ஒருவர் தான்' என்றார். இராஜாவும் அதை ஒத்துக் கொண்டார்.

இந்தக் கதையைக் கேட்டு விட்டு இந்தக்காலத்து ஆசாமி ஒருவர் 'எனனுடைய பிறந்த நாளுக்கும் நான் வருஷாவருஷம் விருந்துவைப்பேன். நண்பர்களையெல்லாம் கூப்பிடுவேன். அடுத்தவாரம் அந்தப்பிறந்த நாள் வருகிறது. இந்தத்தடவை எனக்கு மிகவும் நெருக்கமான ஒரு நண்பனை நான் கூப்பிடப் போவதில்லை என்று உறுதியாகச் சொன்னார். ஏன் சார் அப்படி என்றேன். போன வருஷம் பிறந்தநாள் அன்றைக்கு வந்தவன் இன்னும் திரும்பிப் போகவே இல்லை சார் என்றார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

### லஞ்ச ஊழல் ஆணைக்குழு

## 5 அமைச்சர்கள் உட்பட 1406 பேர் மீது விசாரணை

(கொழும்பு)

அமைச்சர்கள் ஐவர் உட்பட ஆயிரத்து 406 பேருக்கு எதிரான இலஞ்ச ஊழல் விசாரணை முழு அளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தத் தகவலை இலங்கை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர்களில் ஒருவரான கிங்ஸ்லி விக்கிரமசூரிய நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், கடந்த வருடம் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்குக் கிடைத்த 2 ஆயிரத்து 52 முறைப்பாடுகளில் 646 முறைப்பாடுகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

அமைச்சர் என்பதற்காகவோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் என்பதற்காகவோ குற்றம் புரிந்தவர்களுக்கு எதிரான விசாரணையை நிறுத்தவோ காலம் கடத்தவோ மாட்டோம்.

எமக்குக் கிடைக்கும் சகல முறைப்பாடுகள் தொடர்பாகவும் கடைசி வரை விசாரணை நடத்தப்படும் என்றார். (உ)

### ஏ-9 வீதி திறப்பதற்கு முன்

# குடாநாட்டில் மீளக்குடியமர்ந்தோர்க்கு மீதிக்கொடுப்பனவை வழங்க வேண்டும்

### வலி. தென்மேற்குப் பிரதேச சபையில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வலிதென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வீட்டு நஷ்ட ஈட்டுக்கான 25 ஆயிரம் ரூபாவுக்கான கொடுப்பனவில் 10 ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

மீகுதிப் 15 ஆயிரம் ரூபா ஏன் வழங்கவில்லை என கடந்த புதன் கிழமை வலிதென்மேற்கு பிரதேச சபையில் இடம்பெற்ற சபை உறுப்பினர் கூட்டத்தில் கேள்வி எழுப்பப்பட்டது.

வலிதென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய்த் தலைவர் வே. அ. ஜோன்சன் தலைமையில் இடம்பெற்ற சபைக்கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

1996 ஆம் ஆண்டில் இராணுவ நடவடிக்கையின் பின், குடாநாட்டில் பல்வேறு பகுதிகளில் இருந்து மீளக் குடியேறிய மக்களுக்கு பிரதேச செயலர் ரீதியாக 25 ஆயிரம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்பட்டு, அக்கொடுப்பனவுகளை வழங்கவதற்கான உரிய படிவத்தினையும் நிரப்பிக் கொடுத்துடன், அதற்குரிய படிவங்களில் முத்திரை ஒட்டப்பட்டு கையொப்பமும் வாங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மிகுதிப்பணம் 4 வருடங்கள் கழிந்த நிலையிலும் ஏன் வழங்கப்படவில்லை? இதற்கான நிதி கடந்த காலங்களில இல்லையென கூறப்பட்டாலும் தற்போது இதனை வழங்கு வதற்கான நிதி தாராளமாக மீளக்குடியமர்த்தலுக்காக ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.செய்யப்பட்டும் உள்ளது.

வலிதென்மேற்கு பிரதேச செயலர்-பிரிவில் மட்டுமல்ல ஏனைய 10 பிரதேச செயலர் பிரிவுகளிலும் மேற்படி மீள்குடியமர்த்தலின் கீழ் வீட்டு நஷ்ட ஈட்டுக்கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

தற்போது ஏ-9 பாதையால் வந்தவர்களுக்கான கொடுப்பனவு வழங்க எடுத்த நடவடிக்கைக்கு மேலாக, ஏற்கனவே வந்தவர்களுக்கான (1996) கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக கேட்டுக்கொள்கின்றோம் எனத்தெரிவித்து வலிதென்மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய் உறுப்பினர்கள் கையொப்பமிட்டு தீர்மானங்கள் எடுத்துள்ளனர்.

இதேவேளை, மேற்படி நிதி ஒதுக்கீட்டில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என மக்கள் குறை நிரப்பு சேவையில் தெரிவிக்கப்பட்டு இது வரையில் வீட்டுடைமை இழப்பிற்கான மிகுதிக்கொடுப்பனவு வழங்கப்படவில்லை என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (உ)

## யுத்த நிறுத்த மீறல்களை கண்காணிக்கப் பணிப்பு

### பிரதமர் ரணில் விடுப்பு

(கொழும்பு)

யுத்த நிறுத்த மீறல்களில் கிழக்கு மாகாணத்தில் கடமைபுரியும் படைவீரர்கள் ஈடுபட்டிருப்பதை உறுதி செய்யும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சம்பந்தப்பட்ட படை அதிகாரிகளுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இவ்விதம் பணிப்புரை விடுத்திருப்பதாக பாதுகாப்பு அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அண்மையில் படை அதிகாரிகளுடன் பிரதமர் நடத்திய பேச்சுக்களின் போதே இப்பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மட்டு அம்பாறை மாவட்ட தளபதி கருணா அம்மானை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ எதிர்வரும் 30 ஆம் திகதி வவுணதீவு பிரதேச செயலர் அலுவலகத்தில் சந்தித்துப் பேசவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## உள்ளூராட்சி சபைகளின் பதவிக காலத்தை நீடிக்க வேண்டும்

### வலி. தென்மேற்கு பிரதேச சபையில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யுத்தம் நடைபெறும் போது தேர்தல் வைப்பது சாத்தியம் என்றால் யுத்தம் இல்லாத சமாதானச் சூழ் நிலையில் ஏன் தேர்தல் நடத்த முடியாது இவ்வாறு வலி.தென்மேற்குப் பிரதேச சபை ,மானிப்பாய் தலைவர் வெலிச் சோர் அன்ரன் ஜோன்சன் கடந்த புதனன்று நடைபெற்ற சபைக் கூட்டத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

வலி.தெனமேற்கு பிரதேச சபை மானிப்பாயில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் சபையின் எதிர் காலம் குறித்து பிரஸ்தாபிக்கப் பட்டதுடன், தீர்மானமும் மேற் கொள்ளப்பட்டது.

எக்காரணம் கொண்டும் யாழ். மாவட்டத்தில் சபையினை விஷேட ஆணையாளரின் கீழ் செயற்படுத்த அனுமதிக்க மாட்டோம்.

ஒன்றில் சபையினைக் கலைத்து உரிய காலத்தில் தேர்தலை முன் வையுங்கள் அல்லது யாழ்.மாவட்டத்தில் உள்ள சபைகளின் பதவிக் காலத்தை மேலும் ஒரு வருடத்திற்கு அதிகரியுங்கள் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (உ)

## இராசி பலன்

**26. 01. 2003**

(தை 12, ஞாயிறு)

| | |
|---|---|
| நவமி | பி.இ 12.37வரை |
| விசாகம் | வைகறை 5.26வரை |
| இராகுகாலம் | 5.06-6.36 |
| சுபநேரம் | 9.36 - 11.06 |

**மேடம்**
குடும்ப மகிழ்ச்சி,நல்லவரவேற்பு,காரிய நன்மை,தெய்வசிந்தை.

**இடபம்**
தேகநலன்,சந்தோசமான நிகழ்வு, தொழில் முயற்சி, உறவினர்வருகை

**மிதுனம்**
குடும்பத் தகராறு, திடீர்நன்மை, ரோகநிலை,காரிய தாமதம்.

**கடகம்**
கற்பனை மிகுதி,உடல்சோர்வு, முயற்சிதாமதம்,பிரயாணசுகம்.

**சிங்கம்**
காரிய அனுகூலம், உறவினர் சந்திப்பு,பொருள் சேர்க்கை,கீர்த்தி.

**கன்னி**
முயற்சிகைகூடும்,மாதர் நட்பு, வாக்குவன்மை,எதிர்பாராத நன்மை.

**துலாம்**
ஜனவசியம்,தெய்வசிந்தை, முயற்சி கைகூடும்; விருந்துபசாரம்

**விருச்சிகம்**
உணர்ச்சிவசப்படல், உறவினர்உதவி, சுபசெலவு,முயற்சிதாமதம்.

**தனுசு**
தடைப்பட்ட காரியம்கைகூடும், வாக்கு மேன்மை,தொழில்விருத்தி.

**மகரம்**
அதிகாரம்,புதியவிடயம், லட்சுமி கரம், காரியசித்தி

**கும்பம்**
கட்டுப்படுதல்,அமைதிக்குறைவு,பிரயாண நன்மை, புதியதிருப்பம்.

**மீனம்**
காரியதடங்கல்,வாகனபயம், உறவினர் வெறுப்பு, உடல்நலக் குறைவு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்

## பற்றைக்குள் இருந்து சிசுவின் சடலம் மீட்பு

(புலோலி)

சிசுவொன்று கொலை செய்யப்பட்ட நிலையில் பற்றைக்குள் இருந்து மீட்கப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் நெல்லியடியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும், கொலையாளியைக் கண்டுபிடிக்குமாறும் நெல்லியடிப் பொலிசாருக்கு பருத்தித்துறை நீதிவான் என்.தங்கராசா உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை நெல்லியடி மத்திய மகாத்மா வீதியில் உள்ள பற்றைக்குள் மேற்படி சிசுவின் சடலத்தைக் கண்டவர்கள் அப்பகுதி கிராம சேவையாளர்கள் மூலம் நெல்லியடி பொலிஸாருக்கு அறிவித்திருந்தனர்.

சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு சமூகமளித்த பொலிஸார், சடலத்தில் வலது கையும், இடது கையின் முன்பகுதியும் துண்டிக்கப்பட்டு கண்கள் இல்லாமல் அடிவயிற்றுப் பகுதி சேதமடைந்த நிலையில் சிசு ஆணா, பெண்ணா என கண்டு பிடிக்க முடியாத நிலையில் சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலம் காணப்பட்ட பற்றைக்குள் இருந்து நீல நிற சேட், சாக்கு, பெண்களின் சட்டை, போத்தல் என்பன மீட்கப்பட்டுள்ளன.

பிரேத பரிசோதனையை பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

அவ் அறிக்கையில், சிசுவின் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பதில் நீதிவான் பகிரங்க தீர்ப்பு வழங்கியுள்ளார். நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு பெற்ற தாய், கொலையாளிகள் ஆகியோரை கண்டு பிடித்து ஆஜர் செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார்.

சிசுவின் சடலம் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. (உ-52)

## ஜி.ரி.சற் நிறுவனத்தினால் 500 வீட்டுத்திட்டம் அமுல்

(யாழ்ப்பாணம்)

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால்,யாழ் மாவட்டத்தில் இவ்வாண்டு 500 வீடுகள் அமைக்கப் படவுள்ளன.

இதற்கான பயனாளிகள் தெரிவு கிராமிய புனர்வாழ்வுக் குழுக்களின் உதவியுடன் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக இடம் பெற்றுவருகிறது.

இதன்கீழ் சொந்தக் காணியையுடைய வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற போரினால் பாதிக்கப்பட்டவர்கள் பயனடையவுள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 200,யாழ் பிரதேச செயலர் பிரிவில் 75, மருதங்கேணி, வேலணை, சண்டிலிப்பாய் பிரதேச செயலர்பிரிவுகளில் தலா 50 என்ற அடிப்படையில் இவ்வீட்டுத்திட்டம் அமுல் படுத்தப்படவுள்ளது.

(உ)

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்
-குறள்-

வலம்புரி

## ஆதாரம் தேவை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் ''ராக்கிங்'' இடம பெற்றதாக யாழ்.பிராந்தியப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டதையடுத்து நிலைமை மோசமடைந்துள்ளது.

பத்திரிகைச் செய்தியை அடுத்து விரிவுரைகளைப் பகிஷ்கரித்த யாழ்.பல்கலைக் கழக மாணவர்கள்,தமது பரீட்சை காரணமாக பகிஷ்கரிப்பை ஒத்திவைத்து விட்டு சில தீர்மானங்களை நிறைவேற்றினர்.இத் தீர்மானத்தில் யாழ்.பல்கலைக்கழக மூதவையில் அங்கத்துவம் பெற்றுள்ள குறித்த பத்திரிகையின் நிர்வாக இயக்குநரை பல்கலைக்கழக வளாகத்திற்குள் நுழைய விடுவதில்லை என்பதும் ஒன்றாகும்.

மாணவர்களால் எடுக்கப் பட்ட இத் தீர்மானங்கள் பகிரங் கப்படுத்தப்பட்டுமிருந்தது.இந நிலையில், நேற்றைய தினம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மூதவை கூடுவதாக இருந்தபோது,அதற்காக பல்கலைக் கழகத்திற்குச் சென்ற குறித்த பத்திரிகையின் நிர்வாக இயக்குநரை அங்கு செல்ல விடாமல் மாணவர்கள் வழிமறித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.அது மட்டுமனறி பல்வேறு கோஷங் களையும்,துண்டுப் பிரசுரங் களையும் வெளியிட்டனர். பல்கலைக்கழக மாணவர்கள என்றால் யார் என்பதை அவர்கள் நிரூபித்தனர்.

யாழப்பாணப் பல்கலைக் கழக வரலாற்றிலேயே மூதவை உறுப்பினர் ஒருவரை வாசலுக்கு வெளியே வைத்து மாணவர்கள் திருப்பியனுப்பியது இதுவே முதற் தடவை.எங்கும் அரசியல்,எதிலும் அரசியல் என்ற தற்போதைய கலாசாரத்தில் இவற்றை எதிர்பார்க்க வேண்டியது நியாயமானதே.

ஏனெனில் ஒரு காலத்தில் யாழ்.பல்கலைக் கழக மூதவையில் அங்கம் பெற்றவர்கள் ஏதோ ஒரு வகையில் சமூக உயர் சிந்தனையாளர்களாக, மதிப்பாளர்களாக இருந்தார்கள்.ஆனால் இப்போது அம்போ நம் தலைவிதி,என்பதாக நிலைமை மாறிவிட்டது.எங்கும் அரசியல் செல்வாக்கு ஊடுருவினால்,நேற்று யாழ். பல்கலைச் கழகத்தில் நடந்தது தான் நடக்கும் என்பதை சகலரும் உணர வேண்டும்.

ஆக,இவற்றைப் போதித்து நேரத்தையும்,இடத்தையும் வீணாக்குவதை விடுத்து மாணவர்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளுக்கு தீர்வு காண்பது மிகவும் அவசியம்.ஒரு பத்திரிகை எச் செய்தியை வெளியிடுவதாக இருந்தாலும்,அதற்குரிய ஆதாரங்களை வைத்திருப்பது அவசியமாகும்.எழுந்தமானமாகச் செய்தியை எழுதி விட்டு குறிப்பெழுதி எல்லோரையும் வென்று விடலாம்மென நினைப்பது தப்பு மட்டுமல்ல, அது பெரும் ஆபத்தையும்,சுய கௌரவத்திற்கு இழுக்கையும் தேடுவதாக அமைந்து விடும்.ஏனெனில் இப்போது தானே அநாமதேய துண்டுப் பிரசுரங்கள் தாராளமாக வெளிவருகின்றன.ஆகையால் மாணவர்களின நியாயமான கோரிக்கைகளுக்கு குறித்த பத்திரிகை மதிப்பளிக்க வேண்டும்.தனது செய்திக்கான ஆதாரங்களை வெளிப்படுத்த வேண்டும் அதுவே நியாயமானதும்,பத்திரிகைத் தர்மமுமாகும்.

# இறை சித்தத்திற்குத் தம்மை அர்ப்பணித்தோர் உள்ளங்களில் ஆண்டவரின் அருள்பிரவாகிக்கும்

காலத்துக்குக் காலம் உலகில் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றன. மாற்றங்கள் இன்றேல் வளர்ச்சி இல்லை என்பதை நாம் அனுபவ வாயிலாக அறிகின்றோம். ஒரு மொழியோ, கலையோ, கலாசாரங்களோ, பண்பாடோ மாற்றத்திற்கு உட்படாமல் இருக்குமாக இருந்தால் காலப்போக்கில் அவை அழிந்துவிடும் நிலையே தோன்றும். அவ்வாறே மனிதன் மனமாற்றம் பெறாதவனாக பாவங்களுக்கு அடிமைப்பட்டவனாக வாழ்வானாகில் விரைவில் அழிவின விளிம்பிற்கே சென்றுவிடுவான். மனமாற்றம் பெறுபவன் மீட்பின் பாதையை, வாழ்வை கண்டடைவான். திருமுழுக்கு யோவானும், இயேசுவும் மனம் மாறி கடவுளின் அரசில் பங்கு கொள்ள அழைப்பு விடுக்கின்றார்கள். இப்பொழுது அப்போஸ்தவர்களின வழிவந்த திருச்சபையானது நற்செய்திப்பணியை ஆற்றி வருகின்றது

### மீட்புக்கான ஆயத்தம்

எல்லாமக்களும் அழிவுறாமல் மீட்பைக் கண்டடைய வேண்டுமென்றே இறைவன் விரும்புகிறார். தொடக்கம் முதலே மக்களைத், தலைவர்கள, அரசர்கள், இறைவாக்கினர்கள் வழியாக இறைவன் ஆயத்தம் செய்து வந்தார். ஆனாலும் அன்றுவாழ்ந்த மக்களும் இறைவனை மறுதலித்து அந்நிய தெய்வங்களை வழிபட்டு வந்தார்கள். உண்மை இறைவனையும் அவர் காட்டிய வழிகளையும் புறக்கணித்தார்கள். அதனாலே அவர்கள் பேரழிவுகளையும், பெருந்துன்பங்களையும் அனுபவித்து அடிமைகளாகவும் நாடுகடத்தப்பட்டார்கள். நாமும் இறை அழைப்பை ஏற்றுக் கொள்ளாத, அல்லது, புறக்கணிக்கின்ற வேளைகளில் எல்லாம் வேதனைகள், நெருக்கடிகள், துன்பங்களுக்கே ஆளாகுகின்றோம்.



### பணியின் பங்காளர்

அன்று கலிலேயாக் கடலோரமாகச் சென்ற போது முதல் சீடரைத் தமது பணிக்கு அழைத்தார். அவர்கள் மறுப்பு ஏதுமின்றி இயேசுவின் பின் சென்றார்கள். அவர்களை இயேசு தமது பணியின் பங்காளர்களாகச் சேர்த்துக் கொண்டார். இன்று எத்தனை பேர் கிறிஸ்தவ வாழ்வுக்குச் சான்று பகர்கின்றவர்களாக வாழ்கின்

## பரமபிதாகாட்டிய பாதை

றோம். எமது போலிப் புகழை கௌரவத்தை, சுயத்தை வெளிக்காட்டத் துடிக்கின்றோம். உண்மையை ஒரு பக்கம் வைத்துவிட்டு உருண்டோடும் உலகோடு அடித்துச் செல்லப்படுகின்றோம் போலி இறைவாக்கினர்களாக, கள்ளத் தீர்க்கதரிசிகளாக வேடம் போடுகின்றோம். ஒரு கணம் எண்ணிப் பார்ப்போம் எமது போதனைகளின் சாரம் என்ன? எமது வாழ்வின் பங்களிப்பென்ன? கணனிக்குள்ளா? கடவுளுக்குள்ளா?, உலகின் புகழுக்குள்ளா? உண்மைக்குள்ளா? நீதிப் பேச்சுக்களிலா? நீதித்தீர்ப்பிலா?...

### மனந்திரும்பல்

மனந்திரும்பாவிடில்? யோனா இறைவாக்கினர் தினிவே மக்களுக்கு இறைவாக்குரைத்தது போல ஆண்டவனின் குரல் புறக்கணிக்கப்படும் உள்ளங்கள வழியாகவும் ஒலித்துக் கொண்டே இருக்கும். அதனைக் கேட்பவர்களும், கண்டு கொள்பவர்களும் மிகச் சிலரே. பெரிய சனத்திரள் வெள்ளத்திலல்ல சிறிய குழுக்களில் இறை சித்தத்திற்கு தம்மை கையளிப்பவர்களில் ஆண்டவரின் அருட்கரம் செயறபடும். அரும்பெரும் வல்ல செயல்கள் நடைபெறும். பிறரிலே குற்றங்காண்பதை விடுத்து

### அன்ரனிபீற்றர்

எம் பிழைகளுக்காக பரிகாரம் தேடுவோம். இறைவனைச் சரணடைவோம். திருச்சபையில் நல்லாயனும், மேய்ப்பர்களும், மந்தைகளும் வாழ்வின் ஊற்றை நாடிச் செல்ல செய்போம். ஆண்டவருக்கு உரியவற்றில் அக்கறை உள்ளவர்களாக மேலும் செல்வங்களைத் தேடிச் சேர்க்கின்றவர்களாக உருமாற்றம் பெறுவோம். நற்செய்தியாம் ஊற்றிலிருந்து பிரவாகிக்கும் தேவாமிர்தத்தை தினந்தினம் பருகிமகிழ்வோம். செயற்பாடுவோம் சான்று பகர்வோம் இறையருள் பெறுவோம்.

## கேணல் கிட்டுவின் நினைவு தினம் பிரான்சில்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட 10 மாவீரர்களின் 10 ஆம் ஆண்டு நினைவு எழுச்சி நிகழ்வு அண்மையில் பிரான்சின் பாரிஸ் நகரில் ''பனியோலை'' மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரான்ஸ் கிளை பிரதிநிதி சுந்தரவேல் பொதுச் சுடரை ஏற்றிவைத்து நிகழவினை ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் பாரிஸ் ''ஈழநிலா'' இசைக் குழுவினரால் எழுச்சி கானங்கள் இசைக்கப்பட்டன.

நூற்றுக் கணக்கான மக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (உ-10)

## கொழும்பில் நடைபெறவுள்ள உலக இந்து மாநாட்டில் பங்கேற்க வெளிநாட்டவர்கள் பலரும் விருப்பம்

(யாழ்ப்பாணம்)

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் மே மாதம் 2ஆம் திகதி முதல் 5 ஆம திகதிவரை கொழும்பில் நடைபெறவுள்ள உலக இந்துமாநாட்டிற்கு ஆதரவு பெருகிவருவதாக இந்து கலாசார அமைச்சு வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் கொழும்பு இராமகிருஷ்ணமிஷன், கொழும்பு விவேகானந்த சபை, இலங்கை இந்துமாமன்றம் போன்ற பிரபலமான சமய நிறு வனங்கள் இம் மாநாட்டிற்கு பூரண ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்கி வருகின்றன.

மாநாட்டுப் பணிகளின், பிரதான பெறுப்புக்களை இந்துசமய நிறுவனங்களைச் சார்ந்தோர் ஏற்றுக் கொண்டுள்ளனர். இலங்கை இந்துப் பேரவை, சனாதன தர்மயுவ விழிப் புணர்சசிக் கழகம் முதலியன தாமாகவே முன்வந்து மாநாட்டு பொறுப்புக்களில் பங்கேற்றுக் கொண்டுள்ளன.

நாடளாவிய ரீதியில் இலங்கையில் வாழும் இந்துக்களும் சமயாபிமானிகளும், இந்து சமயநிறுவனங்களும் வேற்றுமைகளை மறந்து, இம்மாநாடு தொடர்பான நிகழ்ச்சிகளிலே பங்கேற்று இந்து சமுதாயத்தை மேன்மைப்படுததுவதற்கும், பாதுகாப்பதற்கும் உறுதி பூண்டுள்ளனர்.

இம்மாநாட்டிற்கென மிகக் கூடுதலான பேராளர் பார்வையாளர்கள் விண்ணப்பங்கள் தமிழகத்திலிருந்து கிடைத்துள்ளன. வட இந்தியாவிலிருந்தும், பிற தேசங்களில் இருந்தும் பெருமளவிலான பேராளர்கள், பார்வையாளர்கள் வரவுள்ளனர்.

பெங்களூரிலிருந்தும் வட இந்தியாவிலிருந்தும், தமிழகத்திலிருந்தும் உன்னதமான கலைஞர்களை வரவழைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவர்களில் சிலர் தாமாகவே பங்குகொள்ள முன்வந்துள்ளனர். என்பதும் குறிப்பிடத்தக்கது. வேதனமின்றி நிகழ்ச்சிகளை அரங்கேற்றுவதற்கும் அவர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

இம் மாநாடு இந்து விவகார அலுவல்கள் அமைச்சினால் நடத்தப்படுகின்றபோதிலும், உண்மையில் அமைச்சின் தலைமையில் இலங்கையில் வாழும் இந்து சமுதாயத்தினை பிரதிநிதிதுவப்படுத்துகின்றபோது மன்றங்களும், நிறுவனங்களும் பொறுப்பேற்றுப் பங்குகொண்டு நடத்தவிருக்கும் மாநாடாக உருமாறியுள்ளது. பல நிகழ்ச்சிகளை பொறுப்பேற்று தாமேஒழுங்கு செய்து அவற்றின் செலவீனங்களை ஏற்கவும் இந்நிறுவனங்களும் தனி நபர்களும் முன்வந்துள்ளனர்.

கொழும்பிலுள்ள இந்து இளைஞர் சங்கமொன்று வெளிநாடுகளிலிருந்து வரவுள்ள பேராளர்கள், பார்வையாளர்களில் 50 பேரை விமான நிலையத்திலிருந்து அழைத்து வருவதிலிருந்து திரும்பிச் செல்லும்வரை அவர்களுக்கு வேண்டிய எல்லாவிதமான தேவைகளையும், வசதிகளையும் வழங்க முன் வந்துள்ளது.

அதேசமயம், இளைஞர் மாநாடு நடைபெறும் தினத்தில் அன்றைய மாநாட்டுச் செல்வினங்கள் அனைத்தையும் அவர்கள் பொறுப்பேற்பதாகவும் உத்தரவாதமளித்துள்ளனர். அவர்களுக்கு இதனால் எட்டு இலட்சம் முதல் பத்து இலட்சம்ரூபா வரை செலவு ஏற்படும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, வவுனியா, கண்டி, யாழ்ப்பாணம், திருகோணமலை, பதுளை முதலிய பிரதான நகரங்களிலும் பிராந்திய ரீதியில் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. அங்கு செயறபடும் குழுக்கள் சுதந்திரமாக எதுவித கட்டுப்பாடுமின்றி இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு ஆரம்பச்செலவினங்களுக்கு இயன்ற பணத்தை வழங்கவுள்ளது. தேவையான மிகுதிப் பணத்தை பிரதேசத்திலுள்ள குழுக்கள் சேர்த்துக் கொண்டு தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளன.

கொழும்பில் சிறப்பாக நடைபெறவுள்ள மாநாடும் பிராந்திய ரீதியில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகளும் இலங்கை வாழ் இந்துமக்களிடையே ஒரு புத்துணர்வையும், மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தும் என்பது அமைச்சின் எதிர்பார்ப்பாகும என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

### தினசரி தியானம்

## சித்த சுத்தி

நீதான் இவ்வுலகம் முழுவதற்கும் அதிகாரி. யார்க்கும் நீ அடிபணிய வேண்டாம். மனவருத்தம், பயம், கவலைகள் இவற்றை விட்டுவிடு, சாந்தியை நாடு, எந்த நேரமும் ஆத்ம வழிபாடு செய். ஒழுங்குபட்ட வாழ்க் கையை நடத்து. உயர்ந்த நற்குணங்களக் கடைப்பிடி. நேர்மையாக நட. பிறர் நலத்தின் பொருட்டு உழை. உன் ஆசிரியர்க்கு நன்றி காட்டு. ஏகாக்கிர சித்தம் கொள். ஆசை, கோபம், சுயநலம், செருக்கு இவைகளை நீக்கு. நீ சித்த சுத்தி அடைவாய், பேரானந்தம் பெறுவாய்.

சுவாமி சிவானந்தர்

## கலந்துரையாடல்

(சுதுமலை)

மானிப்பாய் - சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள மருந்தகங்கள் மருந்து விற்பனைநிலைய உரிமையாளர்கள் மற்றும் தனியார் வைத்திய நிலையங்கள் நடாத்தும் வைத்தியர்கள் தனியார் ஆயுள்வேத வைத்தியர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் டாக்டர். கே. கணேஸ்வராஜா தலைமையில் நாளை நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட உணவு மருந்து பரிசோதகர். த. மகாதேவன் மற்றும் சுகாதாரத்திணைக்கள அதிகாரிகளும் தமிழீழ சுகாதார சேவைப் பிரிவைச் சேர்ந்தவர்களும் கருத்துரைகள் வழங்கவுள்ளனர். (உ-252)



மானிப்பாய் மாக்கற் லேனைச் சேர்ந்த செல்லையா சண்முகசுந்தரம் அண்மையில் யாழ்.மாவட்ட நீதிபதி இ.த. விக்னராஜா முன்னிலையில் யாழ். மாவட்டத்திற்கான சமா தான நீதவானாக சத்தியப்பிரமானம் செய்து கொண்டார்.

கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழைய மாணவரான இவர், கொக்குவில் மேற்கு கிராமமுன்னேற்றச் சங்கதின் செயலாளராகவும், கொக்குவில் தாவடி வேம்படிமுருகன் ஆலயதர்மகர்த்தாசபை உறுப்பினராகவும் சேவை யாற்றியுள்ளார். தற்பொழுது கொக்குவில் மேற்கு சனசமூக நிலையத்தின் செயலாளராக சேவையாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டுச் செய்தி

### வி.பி. கிண்ண கிரிக்கெற்

# அவுஸ்ரேலிய அணி வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது.

(மெல்பேன்)

வி.பி.கிண்ண கிரிக்கெற் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 2:0 என்ற நிலையில் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவகரித்தது. அவுஸ்ரேலிய இங்கிலாந்து அணிகளுக்கிடையே மெல் பேனில் நேற்று நடைபெற்ற ஒரு நாள் போட்டியின் இரண்டாவது இறுதியாட்டத்தில் அவுஸ்ரேலிய அணி 5 ஓட்டங்களால் வெற்றி பெற்றது

முதலில் துடுப்பபெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி 50 ஓவர் களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பிறெட்கொக் ஆட்டமிழக காமல் 71 ஓட்டங்களையும் நித்யுகேடன் 69 ஓட்டங்களையும் பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத் தாடிய இங்கிலாந்து அணி 49.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 224 ஓட்டங் களைப் பெற்றது.

இதில் மைக்கல் வோன், அலெக்ஸ்ருவேன் ஆகியோர் தலா 60 ஓட்டங்களையும் நாசார் குசைன் 28 ஓட்டங்களையும் பெற்றனர். (இ-5)

### க.பொ.த. உயர்தர சித்தியுடன்

# ஆங்கில ஆசிரியர்கள் உட்பட 1000 பேருக்கு விரைவில் நியமனம்!

(திருகோணமலை)

தற்போது பாடசாலைகளில் நிலவிவரும் ஆசிரியர் பற்றாக் குறையை போக்குவதற்கு க.பொ.த. உயர்தரத்தில் சித்தி யடைந்த ஆயிரம் பேருக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கு வதற்கான விண்ணப்பங்கள் கல்விச்சேவை ஆணைக்குழு விரைவில் கேரவுள்ளதாக வடக்கு கிழக்கு கல்வி பண் பாட்டு அலுவல்கள் விளை யாட்டுத்துறை அமைச்சின் செயலாளார் ஆர்.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதி ராசாவுக்கு வடக்கு கிழக்கின் மாகாண கல்விஅமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றிலேயே இதனைத் தெருவித துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெருவித்திருப்பதாவது,

தற்போது கோரப்படவுள்ள க.பொ.த உயர்தரப்பரீட்சை சித்தி யடைந்த ஆயிரம் 'பேருக்கு ஆசிரிய நியமனம் வழஙகப்படும் போது ஆங்கிலபாடத்திற்கும் கணிசமான அளவு தொகை யினருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படவிருப்பதால் விண் ணப்பம் கோரப்படும் போது அதற்குரிய அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்யத் அணைவரும் விண்ணப்பம் செய்யலாம் என்றும் அக்கடிததத்தில் மாகாணகல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார். (வ)

# தமிழ்–சிங்கள –முஸ்லிம் மக்கள் குருநாகலில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

குருநாகல் நகரில்நேற்று மூவின மக்களும் இணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

குருநாகல் நகரின் மத்தியில் சூதாட்ட விடுதி ஒன்று நாளை திறக்கப்பட இருந்த போது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெறறது.

இதனால் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டதுடன் கறுப்புக் கொடிகளும் பறக்க விடப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பௌத்த பிக்குகள், கத் தோலிக்க, இந்து குருமார் கள்,முஸ்லிம் மௌலவிகள் ஆகியோரும் கலந்து கொண் டனர். (த)

**ஆயுதங்களை.....**

இரண்டு தாசாப்த்த கால மாக நடைபெற்றுவந்த இன யுத்தம் இப்பொழுது அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கு மிடையே யுத் தநிறுத் தம் ஏற்பட்டுள்ளதையடுத்து ஒரு சொட்டு இரத்தம் கூடச் சிந்தாமல் அமைதியான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.இந் நிலைமை இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதற் தடவையாக இடம் பெற றுள்ளது.அரசும் விடுதலைப் புலிகளும் மேற்கொண டுள்ள யுத்தநிறுத்த உடன் படிக்கையை உறுதியாக கடைப்பிடிப்பதற்கு அரசும் விடுதலைப் புலிகளும் முன்வந்துள்ளது.

நாடு பிளவுபடுவதைத் தடுக்கும் முயற்சியில் அரசாங்கம் இராணுவ மீள் பரீசீலனைத் திட்டம் ஒன்றையும் அரசு நடைமுறைப்படுத்தி வரு கிறது.

பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்த போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினாலும், அப் போதைய வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரி னாலும் முன்னெடுத்துச் செல்லப்பட்ட சமாதான முயற்சியையே நாம் தற்போது முன்னெடுத்துச்செல்கின் றோம்.

வடக்குக் கிழக்கில் உயர் பாதுகாப்பு வலய மீள் குடியேற்றம் தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினை களுக்குத தீர்வு காணும் நோக்கில் பிரித்தானியா ,இந்தியா ஆகிய நாடுகளின் பரதிநிதிகளையும் அழைத்துள்ளோம். முன்னாள் இந்திய இராணுவ அதி காரியான சதீஸ் நம்பி யாரதும், பிரித்தானிய இராணுவ அதிகாரியான றோஸினதும் அறிக்கை கிடைக்கப்பெற்றபின் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

இப்போது முன்னெடுத்துச் செல்லும் சமாதான முயற் சிகள் வெற்றி பெற்று இனப்பிரச்சினைக்கு அரசி யல் தீரவு காணப்பட்டபின் புலிகளின் பொலிஸ் நிலை யங்கள்,நீதி மன்றங்கள் குறித்து முடிவு காணப்பட்டு விடும் என்று விடுதலைப் புலி களின் அரசியல் ஆலோசகர் குறிப்பிட்டுள்ளதை

# சுதந்திரதின வைபவத்தில் யாழ்.மாணவர்கள் கலந்து கொள்வர்!

(கொழும்பு)

பெப்ரவரி மாதம் 4ம் திகதி கொழும்பில் நடை பெறவுள்ள சுகந்திரதின கொண்டாட்டங் களில் யாழ்ப்பாணத்தில் உள்ள 21பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் கலந்து கொள்ள வுள்ளனர்

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே புரிந் துணர்வு உடன் படிக்கை ஏற்படுத்தப்பட்ட பின் சமாதானச் சூழ்நிலையில் சுதந்திர தினம் வெகுசிறப்பாகக் கொண்டாடு வதற்கான ஏற்பாடுகளை அர சாங்கம் செய்து வருகின்றது.

இருபது வருட இடைவெளிக் குப்பின் வடபகுதி மாணவர்கள் முதல் தடவையாக கலந்து கொள் ளும் இச் சுதந்திர தின வைபவம் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாக இருக்கும் என அமைச்சர் கலாநிதி ஜயலத் ஜயவர்த்தனா தெரிவித்துள்ளார். (ம)

*ஈ.பி.டி.பி....*

தெரியவந்துள்ளது.

இராணுவமும் பொலிஸாரும் இணைந்து இது தொடர்பில் நேற்று முதல் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை தமது அச்சுவேலி பிரதேச அலுவலகம் மீதும் கடந்த வியாழனன்று இரவு 9.00 மணியவில் கைக்குண்டுகள் வீசப பட்டதாகவும் இதனால் அலுவலுக மின் விளக்குகள் ஜன்னல் கண் ணாடிகள் சேதமடைந்ததாகவும் ஈ.பி.டி.பி வெளியிட்ட செய்திக் குறிப பில்தெரிவிக்கப்பட்டுளளது. (உ-12)

இங்கு சுட்டவிரும்புகிறேன்.

விடுதலைப்புலிகளின் குரல்வானொலியை நடத்து வதற்கு அனுமதிகோரி விண்ணப் பத்தை அனுப்பியிருந்ததன் மூலம் அவர்கள நாட்டின் சட்டதி ட்டங்களை அனுசரிக்கத் தயாராக உள்ளதை எடுத்துக் காட்டுவதாக உள்ளது என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

தற்போது மேறகொள ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளின் இறுதிக்கட்ட முடிவுகளை மக்கள் முன் சமர்ப்பிக்கப்பட்டு அதன் பின் னர் அவர்களுடைய ஆசீர்வா தத்துடன் அதனை அமுல் செய்யவுள்ளோம் என்றும் பிரதமர் ரணில விக் கிரமசிங்கா தனது உரையின்போது தெரிவித துள்ளார். (ம)

*யாழ் பல்கலை.....*

முடியாததால் கூட்டம் நடைபெற வில்லை.

இந்நிலையில் எதிர்வரும் 29ம் திகதிக்கு கூட்டம் ஒத்திவைக் கப்பட்டுள்ளது.

அன்றையதினம் பிற்பகல் 2 மணிக்கு கூட்டம் நடை பெறும்என்றும் அறிவிக்கப்பட்டுளளது(இ-77)

## வரலாற்று கண்காட்சி போட்டி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ வரலாற்றுக் கண் காட்சி தொடர்பான போட்டிப பரீட்சை இன்று காலை 11 மணிக்கு யாழ் பல்கலைக்கழக இராமநாதன் பரீட்சை மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இப்பரீட்சைக்கான பதிவு களை மேற்கொள்ளாத மாணவர் கள் இன்று காலை 10 மணிக்கு பரீட்சை மண்டப வாயிலில் பதிவு களை மேற்கொள்ளலாமென்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

## தலைவர்பதவியில் இருந்து பிரதமர் விலகினார்

(கொழும்பு)

இலங்கைத்தேசிய தொழி லாளா சங்கத் தலைவர் பதவியில் இருந்து பிரதமர் ரணில்விக்கிரம சிங்கா விலகி யுள்ளார்.

இதனையடுத்து தேசிய தொழிலாளர் சங்கத்தின் புதிய தலைவராக ராஜாசேனவிரத்தினா தெரிவு செய்யப்பட்டுள்ளார். செயலாளராக பாராளுமன்ற உறுப பினர் கே. வேலாயுதமும் பொரு ளாளராக பிரதி அமைச்சர் நவீன் திஸநாயக்காவும் தெரிவு செய்யபபட்டுள்ளார்கள் (வ)

**MEDICAL CHECK UP**
**வைத்திய பரிசோதனை**

நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள. நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY, ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள். சிறுநீர்ப்பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [C/5602]

**உடன்தேவை**

மண்டைதீவு சிறுப்புலம் அருள்மிகு சுப்பிரமணிய தேவஸ்தானத்திற்கு நித்திய பூஜை செய்வதற்கு அந்தணர் ஒருவர் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

விளம்பர இல - 340
மே/பா, வலம்புரி
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்

C5709

**ULTRA HEALTH CARE**

எமது நிறுவனம் தனது வடகிழக்குக்கான வைத்திய பரிசோதனை நிலையத்தை ஆரம்பிப்பதற்கான கட்டிடம் அமைப்பதற்கு கீழ்க்காணும் தகைமையுடையவர்கள் தேவைப்படுகிறார்கள்.

01. CIVIL ENGINEERS
சிவில் என்ஜினியர்ஸ்
02. ARCHITECH
ஆர்க்கிரெக்
03. STRUCTURAL ENGINEERS
ஸ்ரக்சரல் என்ஜினியர்ஸ்
04. BUILDING SUPERVISORS
கட்டிட மேற்பார்வையாளர்கள்
05. BUILDING WORKERS (MASONS & LABOURERS)
கட்டிடத் தொழிலாளர்கள்
06. CARPENTERS
தச்சுத் தொழிலாளர்
07. ELECTRICAL TECHNICIANS
மின்னியல் தொழில் நுட்பவியல்
08. WELDERS
வெல்டர்ஸ
09. PAINTERS
பெயின்ரர்ஸ
10. ALUMINIUM TAPRICATERS
அலுமினிய பப்ரிக்கேற்றர்ஸ
11. COOKS ( MALE & FE MALE VEGETARIAN)
சமையல்காரர் ஆண், பெண் சைவ உணவு

தெரிவு செய்யப்படுபவர்களுக்கு வைத்திய வசதி, ஆயுள்காப்புறுதி என்பன இலவசமாக கிடைக்கும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
ULTRA HEALTH CARE
NO: 740,NAVALAR ROAD
JAFFNA
(C/5713)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.01.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.